இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 163 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 10 – புதன்கிழமை 24 ஜனவரி 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 163 : Thiruvalluvar Year - 2055 - Thai 10 - Wednesday 24 January 2024 - Madurai 16 Pages ₹ 5.00

## ஒரு ட்ரில்லியன் டாலர் இலக்கினை விரைவில் அடைந்திடும் முன்னெடுப்பாக

# ரூ.1003 கோடியில் அமெரிக்க தொழிற்சாலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

**சென்னை, ஜன. 24 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (23.1.2024) தலைமைச் செயலகத்தில், அமெரிக்காவைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் (Corning International Corporation) மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ரா காம் லிமிடெட் (Optiemus Infracom Limited) ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் (Bharat Innovative Glass Technologies Private Limited - BIG TECH) நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், உலகத் தரம் வாய்ந்த மின்னணு சாதனங்களுக்கான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிற் சாலை நிறுவுவதற்கு, தமிழ்நாடு அரசின் முதலீடு ஊக்குவிப்பு முகமையான 'Guidance' மற்றும் 'BIG TECH' இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் இலக்கினை விரைவில் அடைவதற்காக தமிழ்நாடு அரசின் தொழில் துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

### கைபேசிகூறுகள் உற்பத்தி!

மேலும், அதிக அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்படக்கூடிய உயர் தொழில் நுட்பம் சார்ந்த தொழில்களையும் (capital intensive hightech Industries), பெருமளவி லான வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய தொழில்களையும் (Employment intensive Industries) ஆகிய இரு தொழில்களையும் ஈர்த்திட பல்வேறு முயற்சிகளையும் தமிழ் நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சென்னையில் இம்மாதம் 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு, முன்னெப் போதும் இல்லாத அளவாக, ரூ.6,64,180 கோடி முதலீடு மற்றும் 26,90,657 நபர் களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு என்ற வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.



பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னா லஜீஸ் நிறுவனம், அமெரிக்காவைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் ஆகிய நிறுவனங் களின் கூட்டு நிறுவனமாகும். அமெரிக் காவை தலைமையகமாகக் கொண்ட கார் னிங் இண்டர்நேஷனல் நிறுவனம் ஃபார்ச் சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும். கைபேசிகள், மடிக்கணினிகள் மற்றும் கைக் கணினிகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் வலுவூட்டப்பட்ட 'கார்னிங் கொரில்லா கிளாஸ்' உற்பத்தி மேற்கொள்ளும் நிறுவனம் ஆகும். ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் நிறுவனம், இந்தியாவில் கைபேசிக் கூறுகள் மற்றும் மடிக்கணினி உற்பத்தியில் அனுபவம் வாய்ந்த நிறுவனம் ஆகும்.

### காஞ்சிபுரம் மாவட்ட தொழிற் பூங்காவில் அமைகிறது!

பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னா லஜீஸ் நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்கா வில், 1003 கோடி ரூபாய் முதலீட்டில், 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், நவீன முறையில் முன்கவர் கண்ணாடி (Front cover glass) தயாரித்து, இந்தியாவில் உள்ள பேனல் தயாரிப்பாளர் கள் மற்றும் கைபேசி உற்பத்தியாளர்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், நாட்டிலேயே முதன் முறையாக Precision glass processing தொழில்நுட்பத்தில் உற்பத்தி செய்யப்பட்டதாக இருக்கும்.

தமிழ்நாட்டில் இதற்கான இத்தொழிற் சாலை அமைக்கப்படுவதற்காக, நேற்று முத லமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ் நாடு அரசின் முதலீடு ஊக்குவிப்பு முகமையான 'Guidance' மற்றும் பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக் குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செய லாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலா ளர் வி. அருண் ராய், 'Guidance' நிறுவனத் தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலை மைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் இயக் குநர் அசோக் குமார் குப்தா, கார்னிங் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக் குநர் சுதிர் பிள்ளை, பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் இயக் குநர் பாவ்னா சிங்கல், கார்னிங் இந்தியா நிறு வனத்தின் வணிக இயக்குநர் திவ்யான்சு கவுதம், அரசாங்க விவகாரங்கள் இயக்குநர் அமித் குமார் ஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 24-01-2024

# 'தினமணி'யும் 'துக்ளக்'க்கும் சொன்னது என்ன?

ஏன் இந்த நாட்டில் கோவில் எதுவும் கட்டப்பட்டதே இல்லையா? கோவில் திருப்பணிகள் நடந்ததே இல்லையா? பிரதமர்கள் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்தது இல்லையா?

ஏதோ நாட்டில் முதல் முதலாக ராமருக்கு கோவில் கட்டப்பட்டதைப் போலவும், திருப்பணிகள் நடந்ததைப் போலவும், கோவிலுக்குள் செல்லும் முதல் பிரதமர் நரேந்திர மோடிதான் என்பதைப் போலவும் கட்டமைத்து பா.ஜ.க. தேடிக் கொள்ளும் விளம்பரத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை.

நாம் முன்பு சொன்ன எதுவும் முதல் முறையல்ல. ஆனால் ஒன்றே ஒன்று மட்டும்தான் முதல் முறையானது. பாபர் மசூதியை இடித்துப் போட்ட இடத்தில் இந்த ராமர் கோவில் கட்டப்பட்டுள்ளது. அதனால்தான், ஏதோ நடத்த முடியாததை நடத்திக் காட்டியதைப் போல துள்ளிக் குதிக்கிறார்கள்.

பாபர் மசூதி 6.12.1992 அன்று இடிக்கப்பட்டபோது 'தினமணி' நாளிதழும், 'துக்ளக்' வார இதழும் எழுதிய தலையங்கங்கள் மிக முக்கியமானவை. 32 ஆண்டுகளுக்கு முந்தைய எழுத்துகள் இப்போதும் எப்படி பொருந்திப் போகின்றன என்பதைக் கவனியுங்கள்.

வழக்கமாக 4 ஆம் பக்கத்தில் தலையங்கம் தீட்டும் தினமணி, பாபர் மசூதி இடிப்புக்கு மறுநாள் (7.12.1992) முதல் பக்கத்தில் தலையங்கம் தீட்டியது. தலைப்பு 'தேசத் துரோகம்' என்பது ஆகும். **'அயோத்தியில் நடந்த அட்டூழியம் நமது தேசத்தின் கவுரவத்துக்கே இழுக்காகும். ஒரு மதச்சார்பான இலக்கை அடைவதற்கு ஏமாற்று வேலை, மிருக வெறிச் செயல்கள் ஆகியவற்றில் இறங்கக் கூட தயாரான நிலையில் இந்தியாவில் முக்கிய எதிர்க்கட்சி இருக்கிறது என்பது நாட்டுக்கு அம்பலமாகி இருக்கிறது. ... ஹிந்து சாம்ராஜ்யம் இங்கு நிறுவப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறவர்களின் உள்ளங்களில் நீண்ட நாளாக ஊறிக் கிடக்கின்ற பத்தாம்பசலி கோஷங்களின் விளைவாகவே சர்ச்சைக்குரிய கட்டடம் பங்கப்படுத்தப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. .... அயோத்தியில் நடந்த சம்பவங்களுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று பெரும்பாலான பா.ஜ.க. தலைவர்கள் கையை விரிக்கலாம். ஆனால் அவர்கள் சொல்வது உண்மை என்று நம்பும் அளவுக்கு யாரும் அறிவில்லாதவர்கள் அல்ல..."** என்று எழுதியது 'தினமணி'.

பாபர் மசூதியை இடித்த பிறகு வெளியான 'துக்ளக்' இதழின் அட்டைப் படத்தை முழுமையான கருப்பாக அச்சிட்டு வெளியிட்டார் அதன் அன்றைய ஆசிரியர் சோ அவர்கள். 15.12.1992 தேதியிட்ட 'துக்ளக்' இதழ் அது. அந்த அட்டைப் படத்துக்கு சோ ஒரு விளக்கம் எழுதினார். **"அயோத்தி நிகழ்ச்சியும், அதைத் தொடர்ந்த வன்முறைச் சம்பவங்களும் இந்த நாட்டிற்குத் தந்திருக்கும் பரிசை விளக்குகிறது அட்டை. எல்லோரும் சேர்ந்து முயன்றால், இந்தக் கறையைத் துடைத்து விடலாம் என்று நம்புவோம்"** என்று எழுதினார் சோ. 32 ஆண்டுகள் கழித்து என்ன நடந்திருக்கிறது என்பதை விளக்கத் தேவையில்லை.

பாபர் மசூதி இடிப்பை மிகக் கடுமையாகக் கண்டித்தவர் சோ. **'அயோத்தியில் அயோக்கியத்தனம்' என்றே தலைப்பிட்டு தலையங்கம் தீட்டினார், சோ. "அயோத்தியில் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., வி.ஹெச்.பி., பஜ்ரங் தள் ஆகிய அமைப்புகளைச் சார்ந்தவர்களும், அவர்களால் குவிக்கப்பட்ட வெறியர்களுமாகச் சேர்ந்து, மசூதியை இடித்துத் தள்ளிவிட்டார்கள். ஆலயத் திருப்பணி என்ற பெயரில், அசல் காட்டுமிராண்டித்தனத்தை நடத்தி இருக்கிறார்கள்.**

**'மசூதிக்கு எந்தவிதச் சேதமும் வராமல், பார்த்துக் கொள்ளப்படும்' என்று பொது மேடைகளில் பா.ஜ.க.வினர் பேசிய பேச்சு காற்றோடு போயிற்று. இது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டுக்கு எழுத்து மூலமாக உத்திரப்பிரதேச பா.ஜ.க. அரசு கொடுத்த வாக்குறுதி மசூதி இடிவதற்கு முன்பாகவே பொடிப்பொடியாகிவிட்டது. உ.பி. அரசுக்காக சுப்ரீம் கோர்ட்டில் ஆஜராகிய பிரபல வக்கீல் மனம் நொந்து போய், 'அவமானத்தில் நான் தலைகுனிகிறேன்' என்று கோர்ட்டிலேயே கூறியிருக்கிறார்.**

**கோவில் மூலம் கிடைக்கக் கூடிய ஓட்டுக்காக, நாட்டிற்கே பா.ஜ.க. ஒரு பெரும் நாசத்தை விளைவித்துவிட்டது. 'ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், கர சேவகர்களைத் தடுக்க முயன்றார்கள் முடியவில்லை. வி.ஹெச்.பி.யினர் பொறுமையைக் கடைப்பிடிக்கும் படி வேண்டினார்கள் - நடக்கவில்லை. பா.ஜ.க.வினர் மன்றாடிக் கேட்டுக் கொண்டனர் - அடக்கமுடியவில்லை' என்றெல்லாம் சால்ஜாப்பு சொல்லலாம். இதெல்லாம் கால் காசு பெறாத வெற்று வார்த்தைகள்.**

**இந்த வெறிக் கூட்டத்தை அங்கே கூட்டும்போது இவர்களுக்கெல்லாம் புத்தி எங்கே போயிற்று? 'மசூதி இடிக்கப்பட்டே ஆக வேண்டும்' என்று முழங்கி வெறியைத் தூண்டிய போதெல்லாம், இவர்களுடைய மனிதத் தன்மை என்னவாயிற்று?"** என்று கேட்டார் சோ. (துக்ளக் - 15.12.1992 பக்கம் 1)

இன்றைக்கு துக்ளக், தினமணி ஆகியவை இப்படி எழுதாது. எழுதுவார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது. இந்த நிலைக்கான 'பரிகாரம்' என்ன?

அதையும் சோ சொல்லி இருக்கிறார். 1.8.1992 இதழில் சோ எழுதினார்:

**" ... ராமர் கோவில் விவகாரத்தில் மத நம்பிக்கைக்கோ, தெய்வ பக்திக்கோ எந்தச் சம்பந்தமும் கிடையாது. ஓட்டு அரசியல் ஒன்றுதான் இப்பிரச்சினையில் முக்கியத்துவம் பெறுகிறது. அதனால்தான் தீர்வு காண்பதும் கடினமாக இருக்கிறது. ... நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட முடியாது என்ற விபரீதமான பிடிவாதத்தை விஸ்வ ஹிந்து பரிஷத் கைவிட வேண்டும். மறுத்தால் விஸ்வ ஹிந்து பரிஷத்தையே கைவிட பா.ஜ.க. முன்வர வேண்டும். மறுத்தால் பா.ஜ.க.வையே கைவிட விவரமறிந்தவர்கள் முன் வருவார்கள்"** - என்று எழுதினார் சோ.

ராமர் கோவில் விவகாரம் என்பது ஓட்டு அரசியல் மட்டும்தான். அதனை உண்மையான பக்தர்கள் அனைவரும் அறிவார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (23.1.2024) தலைமைச் செயலகத்தில், அமெரிக்காவைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் (Corning International Corporation) மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் (Optiemus Infracom Limited) ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் (Bharat Innovative Glass Technologies Private Limited – BIG TECH) நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் – பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், உலகத்தரம் வாய்ந்த மின்னணு சாதனங்களுக்கான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலை நிறுவுவதற்கு, தமிழ்நாடு அரசின் முதலீடு ஊக்குவிப்பு முகமையான 'Guidance' மற்றும் 'BIG TECH' இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் இயக்குநர் அசோக் குமார் குப்தா, கார்னிங் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சுதிர் பிள்ளை, பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் இயக்குநர் பாவ்னா சிங்கல், கார்னிங் இந்தியா நிறுவனத்தின் வணிக இயக்குநர் திவ்யான்சு கவுதம், அரசாங்க விவகாரங்கள் இயக்குநர் அமித் குமார் ஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பாக

# சேவை புரிந்தவர்கள் - சிறப்பு நிறுவனங்களுக்கு விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.24-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பாக சேவை புரிந்தமைக்காக சிறந்த சமூக பணியாளர் விருது, சிறந்த நிறுவனத்திற்கான விருது, சிறந்த ஆசிரியருக்கான விருது, சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருது, மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருது, சிறந்த ஆரம்பநிலை பயிற்சி மைய ஆசிரியருக்கான விருது, மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான விருது ஆகிய விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்கள்.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்தும் வகையில், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அதிகம் கவனம் செலுத்தி வருவதோடு, மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழ, மாதபராமரிப்பு உதவித்தொகை ரூபாய்.2000/ என உயர்த்தி வழங்கியது, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக மறுவாழ்வு இல்லங்கள் அமைப்பது போன்ற பல புதிய முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், பொதுக் கட்டடங்களில் தடையற்ற சூழல் அமைப்பது, நவீன உதவி உபகரணங்கள் வழங்குவது போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையிலும், அவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவைபுரிந்தவர்களுக்கும், சிறந்த நிறுவனங்கள் மற்றும் தடைகளை கடந்து சிறப்பாக பணியாற்றும் மாற்றுத்திறனாளிகளை ஊக்கப்படுத்தும் விதமாகவும் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பாக சேவை புரிந்தமைக்காக சிறந்த சமூக பணியாளர் விருதினை எ. மோகன் அவர்களுக்கும், சிறந்த நிறுவனத்திற்கான விருதினை தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, ஆக்டிவ் மைண்ட்ஸ் தொண்டு நிறுவனத்திற்கும், சிறந்த ஆசிரியருக்கான விருதினை மன வளர்ச்சி குன்றியோருக்கு கற்பித்ததற்காக தி ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டி ஆஃப் திருச்சிராப்பள்ளி ஆசிரியர் அ. வாசுகி தேவி அவர்களுக்கும், செவித்திறன் குறைபாடுடையோருக்குக் கற்பித்தற்காக கிருஷ்ணகிரி - அண்ணா நகர், நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆசிரியர் ஜா.அருண்குமார் அவர்களுக்கும், பார்வைத்திறன் குறைபாடுடையோருக்குத் கற்பித்ததற்காக மதுரை, செயின்ட் ஜோசப் பார்வையற்றோர் பள்ளி ஆசிரியர் சகோதரி அ. பாக்கியமேரி அவர்களுக்கும்;

சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருதினை கை, கால் பாதிக்கப்பட்டோர்/ தொழுநோய் குணமடைந்தோர் பிரிவில் திருமதி. எஸ். நீலாவதி (சிறந்த சுயதொழில் புரிபவர்), செ. சுதீஷ்குமார் (சிறந்த பணியாளர்), அறிவுசார் குறையுடையோர் பிரிவில் பா. முத்துக்குமார், செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பிரிவில் திருமதி. ரா. விஜயலெட்சுமி, பல்வகை மாற்றுத்திறனாளி பிரிவில் செல்வி. வி. சௌந்திரவள்ளி, மனநோயால் பாதிக்கப்பட்டோர் பிரிவில் திருமதி. இ. ஜாக்குலின் சகாயராணி, புற உலக சிந்தனையற்றோர்/ குறிப்பிட்ட கற்றலில் குறைபாடுடையோர் பிரிவில் ஆ.பிரேம்சங்கர் ஆகியோருக்கும்;

மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருதினை காஞ்சிபுரம் பச்சையப்பாஸ் சில்க்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், சிறந்த ஆரம்ப நிலை பயிற்சி மைய ஆசிரியருக்கான விருதினை செவித்திறன் குறைபாடுடையோருக்குக் கற்பித்ததற்காக காஞ்சிபுரம் தமிழ்நாடு அரசு செவித்திறன் குறையுடைய இளம் சிறார்களுக்கான இலவச ஆரம்ப பயிற்சி மைய ஆசிரியர் திருமதி எம். பாலகுஜாம்பாள் அவர்களுக்கும், அறிவுசார் குறையுடையோருக்கு கற்பித்ததற்காக கன்னியாகுமரி சாந்தி நிலையம் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளி ஆசிரியர் ஜெ. ஜெயசீலன் அவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய சிறந்த ஓட்டுநருக்கான விருதினை இ.சுந்தர் வேலு அவர்களுக்கும், சிறந்த நடத்துனருக்கான விருதினை ஏ.தர்சியஸ் ஸ்டீபன் அவர்களுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளிதரன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் கமல் கிஷோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை

# தயாரிக்கும் குழுவினரின் கலந்தாலோசனைக் கூட்டம்!

## குழுவின் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

சென்னை, ஜன. 24 -

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல், தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுக் கூட்டம், குழுவின் தலைவர், துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் நேற்று (23.1.2024) பகல் 12 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், விவசாய அணிச் செயலாளர் ஏ.கே. எஸ்.விஜயன், சொத்து பாதுகாப்புக்குழுச் செயலாளர் பி.டி.ஆர். பழனிவேல்தியாகராஜன், தகவல்தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி. இராஜா, வர்த்தகர் அணி துணைத் தலைவர் கோவி. செழியன், மாநிலங்களவை கழக உறுப்பினர் கே.ஆர். என்.ராஜேஸ்குமார், மாணவர் அணிச் செயலாளர் சி. வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, எம்.பி., மருத்துவர் அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ., மேயர் திருமதி பிரியா ஆகியோர் கலந்து கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கை தயாரிப்பது குறித்து ஆலோசனை நடத்தினர்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகில் உள்ள கீழக்கரையில் இன்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு பிரம்மாண்டமாக ஜொலிப்பதை படத்தில் காணலாம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (23.1.2024) தலைமைச் செயலகத்தில், அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

## திருப்புவனத்தில் கொடியேற்று விழா !

சிவகங்கை, ஜன.24-

திருப்புவனம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் மாட்டுப் பொங்கல் திருநாளை முன்னிட்டு பொங்கல் வைத்து தொழிற்சங்க கொடியை மாவட்ட தி.மு.க. துணை செயலாளர், திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் த. சேங்கை மாறன் ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் நாகூர்கனி, ஒன்றிய செயலாளர்கள் வசந்தி சேங்கை மாறன், கடம்பசாமி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரகமத்துல்லாகான் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் கிருஷ்ணன், ஆதிமூலம், கார்த்தி, தொழிற்சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

### சமூக நல்லிணக்கத்துடன் வாழும் தமிழ்நாட்டில்

# பா.ஜ.க.வினர் ராமரை வைத்து வன்ம அரசியல் செய்வதா?

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜன.24-

சமூக நல்லிணக்கத்துடன் வாழும் தமிழ்நாட்டில் ராமரை வைத்து பா.ஜ.க. வினர் வன்ம அரசியல் செய்வதா? என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து 23.1.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-


தினகரன்

ஜனவரி 23, 2024 செவ்வாய்க்கிழமை

வன்ம அரசியல்

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோவில் கும்பாபிஷேகம் நேற்று வெகு விமரிசையாக நடந்தது. இதில் பிரதமர் நரேந்திர மோடி உள்பட 8 ஆயிரம் விருந்தினர்கள் பங்கேற்றனர். ராமர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுவதை வரவேற்கின்றனர். அதற்காக ராமரை வைத்து அரசியல் நடத்தும் பாஜவின் செயல்பாடுகளை பெரும்பாலான இந்து மக்கள் எதிர்க்கின்றனர். பல மாநிலங்களில் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. ஒன்றிய அரசு அலுவலகங்கள், பொதுத்துறை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், பிராந்திய கிராமப்புற வங்கிகளுக்கு அரை நாள் விடுமுறை அளிக்கப்பட்டது.

ஒன்றிய கல்வி நிறுவனங்களான ஜாமியா மில்லியா இஸ்லாமியா மற்றும் அதன் பள்ளிகள், புதுச்சேரி, டெல்லி பல்கலைக்கழகம் மூடல், தேசிய பங்குச் சந்தை மற்றும் மும்பை பங்குச் சந்தை ஆகியவை அன்றைய தினத்தில் வர்த்தகத்தில் ஈடுபடாது போன்ற அறிவிப்புகள் வெளியாயின.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோவில் கும்பாபிஷேகம் நேற்று வெகு விமரிசையாக நடந்தது. இதில் பிரதமர் நரேந்திர மோடி உள்பட 8 ஆயிரம் விருந்தினர்கள் பங்கேற்றனர். ராமர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுவதை வரவேற்கின்றனர். அதற்காக ராமரை வைத்து அரசியல் நடத்தும் பா.ஜ.வின் செயல்பாடுகளை பெரும்பாலான இந்து மக்கள் எதிர்க்கின்றனர். பல மாநிலங்களில் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. ஒன்றிய அரசு அலுவலகங்கள், பொதுத்துறை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், பிராந்திய கிராமப்புற வங்கிகளுக்கு அரை நாள் விடுமுறை அளிக்கப்பட்டது.

ஒன்றிய கல்வி நிறுவனங்களான ஜாமியா மில்லியா இஸ்லாமியா மற்றும் அதன் பள்ளிகள், புதுச்சேரி, டெல்லி பல்கலைக்கழகம் மூடல், தேசிய பங்குச் சந்தை மற்றும் மும்பை பங்குச் சந்தை ஆகியவை அன்றைய தினத்தில் வர்த்தகத்தில் ஈடுபடாது போன்ற அறிவிப்புகள் வெளியாயின. இதற்கும் ஒருபடி மேல சென்று எய்ம்ஸ், ஜிப்மர் போன்ற முக்கிய மருத்துவமனைகள் மூடல் போன்ற அறிவிப்பு பொது மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து எய்ம்ஸ் தனது அறிவிப்பை திரும்ப பெற்றது. புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு விடுமுறை அறிவிக்கப்பட்ட போதும், அவசர சிகிச்சைகள் வழக்கம் போல வழங்கப்படும். திட்டமிடப்பட்ட பரிசோதனைகள் நடத்தப் படும், என சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜிப்மர் நிர்வாகம் உத்தரவாதம் அளித்ததால் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

ராமர் கோயில் கும்பாபிஷேகம் என்பதை ஒரு கோயில் கும்பாபிஷேகமாக பார்க்க வேண்டும். அதற்காக இந்தியா முழுவதும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விடுமுறை விடும் அளவுக்கு சென்றிருக்கக் கூடாது என நடுநிலையாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். நேற்றைய விடுமுறையால் பங்கு சந்தை, வங்கிகள் மூலம் பல கோடி வர்த்தகம் பாதிப்பு அடைந்தது. பொதுதேர்வுக்கு 40 நாட்கள் உள்ள நிலையில் விடுமுறை என்பது மாணவர்களுக்கு பெரும் சுமையாக மாறியது. வரும் நாடாளுமன்ற தேர்தலில் மீண்டும் மத்தியில் பா.ஜ. ஆட்சியமைக்க வேண்டும் என்பதால் ராமர் கோயிலின் திருப்பணிகள் அவசர அவசரமாக நடந்தது.

சில பணிகள் முழுமையாக முடியவில்லை என சில சங்கராச்சாரியார்கள் கருத்து தெரிவித்தனர். முழுக்க முழுக்க நாடாளுமன்ற தேர்தலை குறி வைத்து கும்பாபிஷேக பணிகள் நடந்ததாக பலரும் குற்றசாட்டினர். தேர்தலுக்காக ராமர் கோயில் கும்பாபிஷேகம் நடத்தப்படுவதாக வெளிநாட்டு பிரபல நாளிதழ்கள் கருத்து தெரிவித்துள்ளன. மோடி, 3வது முறையாக அதிகாரத்துக்கு வர முயற்சி செய்கிறார் என்கிறது வாஷிங்டன் டைம்ஸ். இது போன்று தி பைனான்சியல் டைம்ஸ் உள்பட வெளிநாட்டு ஊடகங்கள் அரசியலுக்காக என கருத்து கூறியுள்ளது. தி.மு.க. அரசு, குடிமக்களின் உரிமைகளை பாதுகாக்க தவறிவிட்டது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் அயோத்தி நிகழ்ச்சியை காண வைக்கப்பட்ட எல்.இ.டி. திரைகள் அகற்றப்பட்டதாக ஒன்றிய அரசில் பொறுப்பில் உள்ளவர் கூறியிருப்பது பெரும் அபத்தமானது. ஏன் எனில் எல்.இ.டி. திரைகள் வைப்பதற்காக இந்து அமைப்புகளே அனுமதி கோரவில்லையாம். உயர்ந்த பதவியில் உள்ளவர்கள் விஷமத்தை விதைக்கக்கூடாது. கோயிலின் பூசாரிகள், ஊழியர்களின் முகங்களில் கண்ணுக்குப் புலப்படாத பயம், மிகப்பெரிய அச்ச உணர்வு இருந்ததாக தமிழக கவர்னர் கூறியிருப்பது வெறுப்பு அரசியலை காட்டுகிறது. கவர்னரின் கூற்றை அர்ச்சகரே மறுத்திருக்கிறார். சமூக நல்லிணக்கத்துடன் வாழும் தமிழகத்தில் ராமரை வைத்து வன்ம அரசியல் செய்வது எந்த காலத்திலும் நடக்காது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# கம்பம் சீமான் பாலுசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.24-

கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

கழகத்தின் மூத்த உடன்பிறப்புகளில் ஒருவரும், கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வந்தவருமான கம்பம் சீமான் பாலுச்சாமி அவர்கள், மறைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

மொழிப்போர் தியாகி தேவேந்திரன் அவர்களின் இளவலான சீமான் பாலுச்சாமி அவர்கள், 2006 பேரவைத் தேர்தலில், ஆண்டிப்பட்டி தொகுதியில் கழக வேட்பாளராகக் களம் கண்டவர். கொள்கை பிடிப்போடு கழகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அவரது மறைவு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பேரிழப்பாகும்!

அவரை இழந்து வாடும் கழக உடன்பிறப்புகளுக்கும், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# நாடாளுமன்றத் தேர்தல் 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், நேற்று முன்தினம் (22-01-2024) மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி 21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர/ பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட “நிர்வாகிகள் சந்திப்பு” கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, “அண்ணா அறிவாலயத்தில்” நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 24.01.2024 | மாலை 3.00 மணி | கிருஷ்ணகிரி, திருவள்ளூர் |
| 27.01.2024 | காலை 9.00 மணி | சேலம், கோவை |
| | மாலை 3.00 மணி | நீலகிரி, திருப்பூர் |
| 28.01.2024 | காலை 9.00 மணி | நாமக்கல், ஈரோடு |
| | மாலை 3.00 மணி | பொள்ளாச்சி, தருமபுரி |
| 29.01.2024 | காலை 9.00 மணி | சிவகங்கை, விருதுநகர் |
| | மாலை 3.00 மணி | தென்காசி, திருநெல்வேலி |
| 30.01.2024 | காலை 9.00 மணி | தூத்துக்குடி, கன்னியாகுமரி |
| | மாலை 3.00 மணி | மதுரை, தேனி |
| 31.01.2024 | காலை 9.00 மணி | இராமநாதபுரம், கடலூர் |
| 01.02.2024 | காலை 9.00 மணி | சிதம்பரம், மயிலாடுதுறை |
| | மாலை 3.00 மணி | நாகப்பட்டினம், தஞ்சாவூர் |
| 02.02.2024 | காலை 9.00 மணி | வேலூர், அரக்கோணம் |
| | மாலை 3.00 மணி | விழுப்புரம், கள்ளக்குறிச்சி |
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22.1.2024

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### அனைத்து மாவட்டங்களுக்கான பரவலாக்கப்பட்ட வளர்ச்சி!

# திராவிட மாடல் அரசின் அணுகுமுறை பலனளிக்கத் தொடங்கியுள்ளது!

‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ வெளியிட்டுள்ள செய்தியை சுட்டிக்காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன.24-**

**‘அனைத்து மாவட்டங்களுக்குமான பரவலாக்கப்பட்ட வளர்ச்சி’ என்ற திராவிட மாடல் அரசின் அணுகுமுறை பலனளிக்கத் தொடங்கியது குறித்த ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா ‘நாளிதழின் செய்தி தொடர்பாகதமிழ்நாடுமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-**




தென் மாவட்டங்களின் வளர்ச்சி குன்றியுள்ளது என்ற நீண்டகாலத் தவிப்பு தீர்கிறது!

‘அனைத்து மாவட்டங்களுக்குமான பரவலாக்கப்பட்ட வளர்ச்சி’ என்ற நமது திராவிட மாடல் அரசின் அணுகுமுறை பலனளிக்கத் தொடங்கியதன் அடையாளமே இந்தச் செய்தி! இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.01.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், பெரும்புலவர் கணியன் பூங்குன்றனார் நினைவுத்தூணை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.01.2024) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லத்தில் மார்பளவு சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சேலத்தில் எழுந்த இளைஞர் சுனாமி!

# வடக்கின் இருட்டை அகற்ற நம்மால்தான் முடியும்; வாருங்கள்!

### கழக இளைஞரணி மாநில மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

சேலம், ஜன. 24 -

திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு ஜனவரி 21 ஆம் தேதி சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளரும், மக்களவை கழக குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. மாநாட்டு உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் பேசியதாவது : -

நம்முடைய இளைஞரணியின் முதல் மாநாடு நெல்லையில் நடைபெற்றது. அபோது கடல் புரண்டு நெல்லை நகரத்துக்குள் வந்து விட்டதோ என்று எண்ணத் தோன்றியது. ஆனால் இன்று சேலத்தைப் பார்க்கிறபோது சேலத்துக்குள் சுனாமியே வந்துவிட்டதோ என்று எண்ணக் கூடிய அளவுக்கு இளைஞர் பட்டாளம், இளைஞர் படை கூடியிருப்பதைப் பார்த்து அத்தனை பேரின் உள்ளமும் மகிழ்ச்சியில் கரைபுரண்டு ஓடுகிறது.

தலைவர் கலைஞர் அவர்கள் இருந்திருந்தால்... 'நான் உங்களை பார்த்துக் கொண்டிருந்தாலே போதும்... பேசக் கூடத் தோணவில்லை' என்று மகிழ்ச்சியோடு சொல்லும் அளவுக்கு இளைஞர் பட்டாளம் நம் முன்னால் குவிந்திருக்கிறது.

இந்த மாநாட்டின் வெற்றிக்காக உதயநிதி அவர்கள் தொடர்ந்து உழைத்திருக்கிறார். தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டமாக சென்று அங்கே இருக்கக் கூடிய இளைஞர்களை, மாவட்டச் செயலாளர்களை சந்தித்து, அவர்களை எல்லாம் வேலை வாங்கி இந்த மாநாட்டை இவ்வளவு வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

நிச்சயமாக நமது தலைவர் அண்ணன் தளபதி அவர்கள், தன் மகனை சான்றோன் என கேட்ட தாய் போல, மகிழ்ச்சியோடு புளகாங்கிதத்தோடு அமர்ந்திருப்பார்கள்.

இந்த அரங்கம் தலைவர் கலைஞர் பெயரால் அமைக்கப்பட்டிருக்கிறது.

உருவாய் அருவாய், உளதாய் இலதாய் மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க் கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க் குருவாய் மதிக்கக் கூடிய நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கக் கூடிய தலைவர் பெயரில் அமைந்திருக்கக் கூடிய அரங்கத்தில் நின்று பேசுவது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

அதுமட்டுமல்லாமல்... நம்முடைய இயக்கத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றிடும் பெரும் வாய்ப்பினை தந்தமைக்கும் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் உதய்க்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே சேலத்தில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் திமுகவின் மாநில மாநாட்டிலே



1997 இலே நமது கழகத்தின் கொடியை ஏற்றினார்கள். இதேபோல 2004 இல் அண்ணன் வீரபாண்டியார் நடத்திய மாநாட்டிலே நம்முடைய அண்ணன் தளபதி அவர்கள் மாநாட்டுக் கொடியை ஏற்றினார்கள். அந்த சேலத்தில் இன்று இந்த மாநாட்டில் கழகக் கொடியை ஏற்றி வைக்கும் வாய்ப்பினை அதுவும்... சேலத்தின் அடையாளமான வீரபாண்டியாரின் பெயரிலே உருவாக்கப்பட்டிருக்கக் கூடிய கொடி மேடையில் நின்று, கொடியேற்றக் கூடிய வாய்ப்பு கிடைத்ததை நினைத்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

#### கருப்பு - சிவப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்கள் நமது இயக்கம் தொடங்கப்பட்டபோது, 'நம் கொடியிலே கருப்பு சிவப்பு இருக்கிறது. கருப்பு என்பது இந்த சமூகத்திலே இருக்கும் அரசியல், சமூக, பொருளாதார இருண்ட நிலையை குறிக்கிறது. இவை எல்லாம் மாற வேண்டும் என்பதற்காக இந்த சிகப்பு நிறம் கீழே இருக்கிறது. கருப்பும் சிவப்பும் சிவப்பாக மாற வேண்டுமென்றால் உதயசூரியன் ஒளியாலே இந்த இருண்மை விரட்டியடிக்கப்பட வேண்டும் என்றார் அண்ணா.

நமது தளபதியின் ஆட்சியிலே அண்ணாவின் கனவு தலைவர் கலைஞரின் வழியிலே ஏறத் தாழ நிறைவேறிவிட்டது. திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. எல்லா துறைகளிலும் முதன்மை மாநிலமாக இருக்கக் கூடியது தமிழ்நாடு என்ற பெருமையை முதலமைச்சர் நமக்காக வழங்கியிருக்கிறார்.

நீங்க கேட்கலாம், 'எல்லாம் கிடைத்து விட்டதே. அப்புறம் ஏன் கொடியில் கருப்பு இருக்கிறது. சிவப்பாக மாற்றிவிடலாமே?' என்று. தென்னகத்திலே இருக்கக் கூடிய தமிழ்நாட்டிலே சிவப்பு வந்துவிட்டது. ஆனால் வடநாட்டிலே இன்னும் கருப்பு இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை விரட்ட வேண்டிய அந்த கடமையும் நமக்கு இருக்கிறது. இந்தியாவிலே இருக்கக் கூடிய இருண்மையையும் விரட்ட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்பதால்தான் அண்ணன் தளபதி அவர்கள், இந்தியா கூட்டணியை ஒருங்கிணைத்து அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறார்.

#### நாம் பெரியாரின் பிள்ளைகள்!

நாம் பெரியாரின் பிள்ளைகள். கொள்கைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அங்கே வட இந்தியாவிலே ஒரு கோயிலைத் திறக்கிறார்கள். அந்த கோவிலைத் திறப்பது பற்றி நான் எதுவும் சொல்லப் போவதில்லை. ஏன் குடியரசுத் தலைவரை அழைக்கவில்லை என்றும் நான் கேட்கப் போவதில்லை. ஆனால் பிரதமர் கோயிலைத் திறக்கும் முன்பு தமிழ்நாட்டில் ஷேத்ராடனம் செய்துகொண்டிருந்தார். அதைப் பற்றியும் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

இங்கே நமது அறநிலையத்துறை அமைச்சர் அமர்ந்திருக்கிறார். எனக்கு கோயில்களைப் பற்றி தெரியாது. அவரிடமே கேட்கிறேன். 'ஒரு கோயிலை முழுசா கட்டி முடிக்காம தெறக்கலாமா?... உங்களைத் தான் கேட்கிறேன்"என்று கனிமொழி அவர்கள் கேட்டதும் மேடைக்கு முன்னர் அமர்ந்திருந்த அமைச்சர் சேகர்பாபு அவர்கள் எழுந்து, 'தெறக்கக் கூடாது...' என்று பதில் அளித்தார்.

'தெறக்க கூடாதுல்ல... ஆனா பிஜேபி என்ன சொல்லுது? நாங்கதான் இந்து மதத்தைக் காப்பாத்துறோம், நாங்கதான் சனாதனத்தைக் காப்பாத்துறோம், நாங்கதான் கோயில்களை எல்லாம் காப்பாத்துறோம், எங்ககிட்டையே கொடுத்துங்க' என சொல்கிறார்கள். கட்டி முடிக்காத கோயிலைத் திறக்கக் கூடாது என்று சொல்கிறது இந்து மதம். எங்க அண்ணி இங்கே உட்கார்ந்திருக்காங்க, அவங்களுக்கும் மனசு கஷ்டமாதான் இருக்கும்.

ஆனால் இந்துக்களை மதிக்காமல் இந்துக்களின் உணர்வுகளை மதிக்காமல் அரசியலுக்காக அரசியல் லாபத்துக்காக, 'உங்க ஆளுங்களே கோயிலுக்கு வரமாட்டேன்' என்று சொல்லக் கூடிய அளவுக்கு அரசியல் விளையாட்டிலே கோயிலைத் திறக்கிறீர்கள். அதுக்கு அரை நாள் லீவு வேறு.

தனியார் டிரஸ்ட் திறக்கும் கோயிலுக்கு அரசு ரயில்கள் எல்லாம் இலவசமாக விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் கேட்கக் கூடாது. இதையெல்லாம் கேள்வி கேட்டால் நமக்கு ICE வைப்பார்கள். ஐஸ் என்றால் இன்கம் டாக்ஸ், சிபிஐ, இ.டி. யார் கேள்வி கேட்டாலும் இது மூன்றும் தேடி வரும்.

ஆனால் இதற்கெல்லாம் பயந்தவர்கள் தமிழ்நாட்டில் யாரும் இல்லை. நீங்கள் என்ன செய்தாலும் உங்களை எதிர்த்து நிற்போம், உங்கள் கருத்துகளை எதிர்த்து நிற்போம். எதிர்த்து நின்று மத்தியிலே இருக்கக் கூடிய ஒன்றிய அரசை மாற்றிக் காட்டுவோம். இதில் மாற்றமில்லை.

#### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பிரதமர்!

தமிழ்நாட்டை எந்தெந்த வகைகளில் வஞ்சிக்க முடியுமோ அப்படியெல்லாம் வஞ்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய மக்களுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை பிரதமர் தருவதில்லை. கடந்த மாதம் பெருவெள்ளம் வந்தது. அப்போது பிரதமர் சொன்னார்... நான் மூத்த அமைச்சர் ராஜ் நாத் சிங்கை அனுப்பியிருக்கிறேன், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை அனுப்பியிருக்கிறேன். இரண்டு பேரும் பார்வையிட்டார்கள். ஆனால் அஞ்சு பைசா கூட இன்னும் வரவில்லை.

ஆனால் இதே குஜராத்தில் வெள்ளம் வந்த போது ஆயிரக்கணக்கான கோடிகளைக் கொண்டுபோய் அங்கே கொட்டினீர்கள். தமிழ்நாட்டில் இருக்கக் கூடியவர்கள் மனிதர்கள் இல்லையா? எனது தொகுதியான தூத்துக்குடியில் எத்தனை ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்திருக்கிறார்கள்... வெள்ளத்தில் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. எத்தனை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை எந்த அளவுக்கு மோசமாகப் பாதிக்கப்பட்டது... இதெல்லாம் உங்கள் மனதை உருக்கவில்லையா?

தமிழ்நாட்டு மக்கள் உங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள். அதனால் எந்த நிவாரணமும், எந்த உதவியும் நியாயமாக வழங்க வேண்டிய நிவாரணமும் வழங்க மாட்டீர்கள்.

வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிட்ட நிதியமைச்சர் என்ன பண்ணினாங்க? அங்க இருக்குற கோயிலுக்கு போய், பூசாரிக்கு ஏன் சம்பளம் கம்மியா கொடுக்குறீங்கனு கேள்வி கேட்கிறார்கள். எதை ஆய்வு செய்யச் சொன்னால் எதை ஆய்வு செய்கிறார்? இதுதான் அவர்களின் எண்ணம், அடிப்படை. யாரைப் பற்றியும் அவர்களுக்கு அக்கறை இல்லை.

விரைவிலே ஒரு மாற்றம் வர வேண்டும். அந்த மாற்றம் தமிழ்நாட்டில் மட்டும் வந்தால் போதாது. தமிழ்நாட்டில் நாற்பதுக்கு நாற்பது நாம் வெற்றி பெறுவது உறுதி. ஆனால் இந்த மாற்றம் நாடு முழுவதும் வரவேண்டும். அப்படி வரவேண்டுமென்றால், இந்த இளைஞர் பட்டாளம் இப்படியே நடந்து வட இந்தியாவுக்கு போனீர்கள் என்றாலே போதும்... அங்கேயும் மாற்றம் நிச்சயமாக வரும். அந்த மாற்றத்தை உங்களால் நிகழ்த்த முடியும். அந்த மாற்றம் மட்டுமே நாட்டைக் காப்பாற்றும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

---

## தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம்!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை

*தென்காசி.ஜன.24.*

*தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நாளை (25.01.2024-வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் கீழப்பாவூர் மைதானத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஜே.கே.ரமேஷ் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் சுந்தரமகாலிங்கம் மாவட்டத் துணைச் செயலாளர்கள் தமிழ்ச்செல்வன், கென்னடி, கனிமொழி, மாவட்டப் பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை, முத்துப்பாண்டி, ஷேக் தாவூது, சேசு ராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள், ரஹீம், அருள், ராஜேஸ்வரன், சமுத்திர பாண்டி, கதிர்வேல் முருகன், சாமித்துரை, தமிழ்ச் செல்வி, ரவிச்சந்திரன், தொழிலதிபர் காளிதாசன், கீழப்பாவூர் பேரூராட்சி மன்ற தலைவர் ராஜன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தமிழ்ச் செல்வி போஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*கீழப்பாவூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சிவன் பாண்டியன் வரவேற்புரையாற்றுகிறார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகச்சாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.*

*இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளு மன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், மாநிலச் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் சாகுல் ஹமீது ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகின்றனர்.*

*நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், மாநில சுற்றுச் சூழல் அணித் தலைவர் பூங்கோதை ஆலடி அருணா, மாநில விவசாய அணி இணைச் செயலாளர்கள் அப்துல் காதர், செல்லப்பா, ஒன்றியச் செயலாளர்கள் செல்லதுரை, அன்பழகன், மகேஷ் மாயவன், ரவிசங்கர், ஜெயக்குமார், மாரி வண்ணமுத்து, சீனித்துரை, அழகு சுந்தரம், திவான் ஒலி, சுரேஷ்,*

*நகரச் செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், அப்பாஸ், பேரூர்க் கழகச் செயலாளர்கள் அழகேசன், முத்தையா, ராஜராஜன், வெள்ளத் துரை, பண்டாரம், சங்கர், சுடலை, நெல்சன், லட்சுமணன், கோபால், சிதம்பரம், தங்கப்பா என்ற முகம்மது உசேன், முத்து மற்றும் இளைஞரணி, மாணவரணி உள்பட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றியக் குழுத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், கழகத் தொண்டர்கள் கலந்து கொள்கின்றனர்.*

*நிகழ்ச்சி நிறைவில் கீழப்பாவூர் பேரூர் செயலாளர் ரெ.ஜெகதீசன் நன்றியுரை யாற்றுகிறார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. மோகனதாசன்

**சனவரி 24 (2012)**



கழகம் ஆரம்பித்த காலத்தில், சீர்காழி வட்ட துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து, தொடர்ந்து கொள்ளிடம் ஒன்றியக் கழகத்தின் முதல் செயலாளராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட துணைச் செயலாளராகவும், நாகை மாவட்டக் கழக அவைத்தலைவராகவும் – துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

பூம்புகார் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கொண்டல் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராகவும், கூட்டுறவு வங்கித் தலைவராகவும், சீர்காழி நிலவள வங்கித் தலைவராகவும், மாநில நிலவள வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

"பல தியாகங்களைச் செய்து, பலமுறை சிறை சென்று, எந்தச் சூழ்நிலையிலும் என்பால் கொண்ட அன்பை மறவாமல் என்னோடு பாசத்தோடு பழகி வருகின்ற தம்பி" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

---

## தைப்பூச விழா

### பழனியிலிருந்து பல்வேறு நகரங்களுக்கு சிறப்பு பேருந்துகள்!

திண்டுக்கல், ஜன. 24–

பழனியில் தைப்பூச திருவிழா 25.01.2024 அன்று நடைபெறவுள்ளது. திண்டுக்கல் மதுரை, திருச்சி, காரைக்குடி, நத்தம், புதுக்கோட்டை, தேனி, கரூர், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் ஆகிய இடங்களிலிருந்தும் அதனைச் சார்ந்த பகுதிகளிலிருந்தும் பழனிக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதினை முன்னிட்டு பக்தர்களின் தேவைக்கேற்ப இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மேற் குறிப்பிட்ட இடங்களிலிருந்து பழனிக்கும், பழனியிலிருந்து மேற்குறிப்பிட்ட இடங்களுக்கும் 22.01.2024 முதல் 28.01.2024 வரை அதிக அளவு சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பழனி தைப்பூச திருவிழாவிற்கு 350 சிறப்புப் பேருந்துகளும், மேலும் தேவைக்கேற்ப அதிக பேருந்துகளும் மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து இப்போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பழனி செல்லும் பக்தர்களின் சுகமான பயணத்திற்கும் உடனடி தொடர்புக்கும், திண்டுக்கல், பழனி, திருச்சி, மதுரை, காரைக்குடி, புதுக்கோட்டை, தேனி, கரூர், நத்தம் ஆகிய பேருந்து நிலையங்களில் பக்தர்களுக்கு உதவிடவும் வழிகாட்டவும் அலுவலர்கள்ஃபயணச்சீட்டு ஆய்வாளர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இப்போக்குவரத்துக்கழகம் மூலம் பொதுமக்கள் மற்றும் பயணிகள் சிரமமின்றி பயணம் செய்ய ஏதுவாக அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் மூலம் (OTRS) WWW. tnstc.in Website, Mob App மற்றும் இணைய சேவை வழியாக முன்பதிவு செய்து பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

---

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தக்கலை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ஆர். ரமேஷ்பாபு, கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப் படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.01.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.ராமச்சந்திரன்

**சனவரி 24 (2011)**



கழகம் துவங்கிய காலம் முதல் கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைக் கழக அவைத் தலைவராக இருபது ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

சாலைப் பணியாளர்கள் சங்க கமிட்டி உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# இளைஞரணி மாநாட்டின் வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் நன்றி!



இந்திய ஒன்றியத்தில் இப்படி ஒரு மாநாடு நடந்திடவேயில்லை என்கிற வகையில், நம் திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டை மாபெரும் வெற்றி மாநாடாக நடத்தி முடித்துள்ளோம்.

மாநில உரிமை மீட்பு முழக்கத்தை முன் வைத்து நடைபெற்ற நம் மாநாட்டின் வெற்றிக்காக உழைத்த கழக நிர்வாகிகள் - இளைஞரணி நிர்வாகிகள் - வருகை தந்து சிறப்பித்த லட்சோப லட்சம் இளைஞரணி தம்பிமார்கள் அனைவருக்கும் எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கமாக தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் மாநாட்டினை நடத்துவார்கள். ஆனால், இந்த முறை நம் தி.மு.கழக இளைஞர் அணிக்கு மாநாடு நடத்துகிற வாய்ப்பை நம் கழகத் தலைவர் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்தார்கள்.

2007 ஆம் ஆண்டு இளைஞரணியின் முதல் மாநில மாநாட்டை நடத்திக் காட்டிய நம் முதலமைச்சர் அவர்கள், 2024ல் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டை நடத்திட பணித்ததோடு, அதற்கான ஊக்கத்தையும் - உற்சாகத்தையும் தந்தார்கள். கழகத் தலைவர் நம் முதலமைச்சர் அவர்களுக்கு என் அன்பும், நன்றியும்.

நம்முடைய சேலத்துச்சிங்கம் வீரபாண்டியாரின் சேலம் மண்ணில் இந்த மாநாட்டை நடத்துவது என்று முடிவான போதே, இந்த மாநாட்டின் வெற்றியும் தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

**மாநாடு நடக்கும் இடம் சேலம் என்று நமது தலைவர் அவர்கள் அறிவித்த அடுத்த நொடியில் இருந்து, வில்லிலிருந்து புறப்படும் அம்பு போல கழக முதன்மைச் செயலாளர் - மாண்புமிகு அமைச்சர் அண்ணன் கே.என்.நேரு அவர்கள், களத்தில் இறங்கிச் செயலாற்றத் தொடங்கினார்கள்.**

**நமது தலைவர் அவர்கள், அவர்களது உரையில் "மாநாடு நடக்கும் இடத்தில் நேரு இருப்பார், அல்லது, நேரு இருக்கும் இடத்தில் மாநாடு நடக்கும்" என்று பாராட்டியதைப் போல; தான் ஒரு "செயல் புயல்" என்று மாநாட்டின் ஏற்பாட்டின் மூலம் நிரூபித்தார்.**

**மாநாட்டுக்கான இடத்தைத் தேர்வு செய்வதில் தொடங்கி - அனைவருக்கும் உணவு பரிமாறுதல் வரை அனைத்தையும் திட்டமிட்டு 'Zero Food Waste' என்று சொல்லக்கூடிய அளவுக்கு நேர்த்தியாக மாநாட்டின் ஏற்பாடுகளை அண்ணன் அவர்கள் செய்திருந்தார்கள்.** இந்த ஏற்பாடுகள், மாநாடு என்றால் அது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இலக்கணமே வகுத்திருக்கின்றன.

இந்த மாநாட்டினை தங்கள் வீட்டு நிகழ்ச்சி என்ற உணர்வோடு ஒட்டுமொத்த சேலம் மாவட்டக் கழகத்தினரும் களத்தில் இறங்கி மாநாட்டின் வெற்றிக்காக உழைத்தார்கள்.

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் ஆர்.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் டி.எம்.செல்வகணபதி என மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆற்றலுடன் செயல்பட்டு மாநாட்டினை தூக்கி உயர்த்தினார்கள்.

சேலத்தில் நடைபெற்ற இளைஞரணி மாநாடு, நம் இயக்கத்துக்கான மாநாடு மட்டுமல்ல, இந்தியாவுக்கான மாநாடு என்பதை உணர்ந்து, மாநாட்டின் வெற்றிக்காக தமிழ்நாடெங்கும் பயணித்தோம்.

இளைஞரணிச் செயல்வீரர்கள் கூட்டங்களின் வாயிலாக மாநாட்டுக்கு வருமாறு அனைவரையும் நேரடியாக அழைத்தோம். அந்தக் கூட்டங்களே ஒரு மினி மாநாடுகள் போல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

செயல்வீரர்கள் கூட்டங்களில் பார்த்த அத்தனை முகங்களையும் மாநாட்டுத் திடலில் பார்த்தது பெரும் மகிழ்ச்சியை தந்தது. இந்தப் பணிகளை எல்லாம் ஒருங்கிணைத்த கழகத்தின் அனைத்து மாவட்டச் செயலாளர்கள் - மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - ஊர்க்கிளை நிர்வாகிகள் அனைவருக்கும் எனது நன்றி.

குறிப்பாக மாநாட்டுக்கான நிதியை வாரி வழங்கிய மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கு இளைஞரணி சார்பில் என் அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொல்லைச் செயலாக்க எட்டுத்திக்கும் களப்பணியாற்றிய இளைஞரணியின் தளபதிகளான நம் மாநிலத் துணைச் செயலாளர்கள் - மாவட்ட - மாநகர - மாநில ஒன்றிய - நகர - பகுதி - வட்ட - பேரூர் - ஊர்க்கிளை அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடெங்கிலிருந்தும் பணிகள் செய்யப்பட்டாலும், அவை ஒருங்கிணைக்கப்பட்ட இடம் சேலம் மாவட்டம். அந்த வகையில், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சகோதரர்கள் வீரபாண்டி ஆ.பிரபு, அருண் பிரசன்னா மற்றும் மணிகண்டன் ஆற்றிய பணிகள் போற்றுதலுக்குரியவை.

மேலும், பணிகளை ஒருங்கிணைக்க நிதிக்குழு - மேடை நிர்வாகக் குழு வரவேற்புக்குழு - சமூக வலைத்தளக்குழு என 23 குழுவினரும், தேனீக்களைப் போல ஓய்வறியாது உழைத்து நம் மாநாட்டை முழுமையடையச் செய்தார்கள்.

பெரியார் நுழைவு வாயில் - அண்ணா திடல் - கலைஞர் அரங்கம் - பேராசிரியர் மேடை - வீரபாண்டியார் கொடிமேடை கழக முன்னோடிகள் வீரபாண்டி ஆ.ராஜா - வீரபாண்டி ஆ.செழியன் - சந்திரசேகரன் - நீட் ஒழிப்பு போராளிகளான தங்கை அனிதா - தம்பி தனுஷ் பெயரில் நுழைவு வாயில்கள் அமைத்து, மாநாட்டு பந்தலை 9 லட்சம் சதுர அடி பரப்பளவில் உருவாக்கித் தந்த அண்ணன் பந்தல் சிவா அவர்களுக்கும்,

"அன்பகம்" வடிவிலான நுழைவு வாயில் அமைத்து, நம் முரசொலி மாறன் அவர்களுடைய பெயரில் இளைஞரணி புகைப்படக் காட்சியை ஏற்பாடு செய்த சுப்பு அவர்களுக்கும் என் அன்பும், நன்றியும்.

பொதுவாகவே, அரசியல் கட்சிகளின் மாநாடு என்றால் சிலர் திட்டமிட்டு மக்கள் மத்தியில் ஒரு விதமான எதிர்மறை எண்ணத்தை கிளப்பி விடுவார்கள். ஆனால், இந்த மாநாடு அந்த எதிர்மறை எண்ணங்களை நேர்மறையாக மாற்றி இருக்கிறது.

அந்த அளவுக்கு கட்டுப்பாடு காத்து மாநாட்டின் வெற்றிக்கு ஒத்துழைத்த இளைஞர் அணியின் தோழர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மாநாட்டுக்கு முந்தைய நாள் நிகழ்ச்சிகளே, மாநாட்டின் வெற்றியை முன்னறிவிப்பு செய்கின்ற வகையில் நடைபெற்றன.

சென்னை அண்ணா சாலையில் நாம் தொடங்கி வைத்த மாநாட்டுச் சுடர், செங்கல்பட்டு - விழுப்புரம் - கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் தாண்டி மாநாட்டுத் திடலுக்கு வந்து சேர்ந்தது. இளைஞரணி துணைச் செயலாளர்கள் நம் கைகளில் வழங்க, அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களில் ஒப்படைத்தோம். பின்பு அந்தச் சுடரை, மாநாட்டில் அமைக்கப்பட்டிருந்த மாநாட்டு ஒளிச்சுடர் மேடையில் ஏற்றி வைத்து மகிழ்ந்தோம்.

> **இன்னார்க்கு இன்னது என்று சொல்லும் பாசிஸ்ட்டுகளையும் - அவர்களுக்கு ஆமாம் சாமி போடும் அடிமைகளையும் தேர்தல் களத்தில் வீழ்த்திடுவோம். "எல்லாருக்கும் எல்லாம்" எனும் "திராவிட மாடல்" தத்துவம் இந்திய ஒன்றியம் முழுவதும் பரவுகின்ற வகையில் அயராது உழைக்க இளைஞரணி மாநாடு எல்லோருக்கும் உத்வேகம் தந்திருக்கிறது.**
>
> **மத அரசியலா - மனித அரசியலா? மனு நீதியா சமூக நீதியா? மாநில உரிமையா? - பாசிச அடக்குமுறையா? என ஒரு கைபார்த்துவிடுவோம். வெல்லப்போவது சமூக நீதியும் - சமத்துவமுமே என்பதை இளைஞர் அணி மாநில மாநாடு நமக்கு கோடிட்டு காட்டியிருக்கிறது.**

நமது மாநாடு இந்த அளவுக்கு மக்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியதற்கு நமது கழக நிர்வாகிகளும் - இளைஞரணி நிர்வாகிகளும் மாநாடு குறித்த விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு சேர்த்ததுதான் முக்கியக் காரணம்.

குறிப்பாக, கழக ஐ.டி.விங் தோழர்கள் - சமூக வலைத்தளத் தன்னார்வலர்கள், மாநாட்டின் நோக்கம் குறித்து சமூக ஊடங்களில் தொடர்ச்சியாக கருத்துக்களைப் பதிவிட்டு மாநாட்டின் முக்கியத்துவத்தை எட்டுத்திக்கும் தெரியச் செய்தனர்.

சுவரெழுத்து விளம்பரங்கள், சமூக ஊடகங்களில் பரப்புரை, என்று கடந்த சில மாதங்களாகவே எங்கு திரும்பினாலும் நமது மாநாட்டைப் பற்றிய பேச்சாக இருந்தது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல் DMK Ridersன் தமிழ்நாடு தழுவிய பிரச்சாரப் பயணம் இளைஞர்கள் மத்தியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் DMK Riders இருசக்கர வாகன அணி வகுப்பு நடந்து "மாநில உரிமைகள் மீட்பு" என்னும் நமது நோக்கத்தை தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சேர்த்தது.

100 இருசக்கர வாகனங்களில் குமரி முனையில் உள்ள திருவள்ளுவர் சிலை அருகே இருந்து புறப்பட்டு தமிழ்நாடு முழுவதும் சுற்றி இறுதியில் மாநாட்டின் திடலுக்கு வந்து சேரும் போது பல்கிப்பெருகி 1000 வாகனங்களாக நம் கழகத்தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்பாக அணி வகுத்துச் சென்ற காட்சி நம் கண்களில் அப்படியே நிற்கிறது. அதில் பங்கேற்ற அத்தனை DMK Ridersக்கும் எமது நன்றி.

முக்கியமாக வானத்தைத் திரையாக்கி, ட்ரோன்களை தூரிகையாகக் கொண்டு நடத்தப்பட்ட

**உதயநிதி ஸ்டாலின்**

"ட்ரோன் ஷோ", இந்திய அரசியல் வரலாற்றிலேயே ஒரு புதிய நவீன நிகழ்ச்சியாக நம் மாநாட்டிற்கும் முந்தைய நாள் நடைபெற்றது.

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் - கழகத் தலைவர் - நம் தாய்த் தமிழ்நாடு - உயிருக்கு நிகரான உதயசூரியன் - கலைஞர் அவர்களின் "தமிழ் வெல்லும்" வாசகம் இளைஞரணியின் இலச்சினை - ஒற்றைச் செங்கலைத் தாங்கிய எனது உருவம் என, வானில் நட்சத்திரங்களுக்குப் போட்டியாக ட்ரோன்கள் மின்னின. அந்தக் கண்கொள்ளாக் காட்சி எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் நம் நெஞ்சத்திலிருந்து அகலாது.

அதை சிறப்பாகவும் - நேர்த்தியாகவும் ஏற்பாடு செய்த குழுவினருக்கு என் நன்றி.

கழக மேடைகளில் இசை முழக்கம் செய்கின்ற அண்ணன் இறையன்பன் குத்தூஸ் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி, முந்தைய நாளே மாநாட்டுத் திடலில் குவிந்த இளைஞர் படையின் செவிக்கு விருந்தாக அமைந்தது. அவருக்கும் என் நன்றி.

மாநாட்டில் பல்வேறு தலைப்புகளில் நிகழ்த்தப்பட்ட உரைகள் அனைத்தும் கருத்துக் கருவூலங்களாக இருந்தன. நேரத்தின் நெருக்கடி காரணமாக ஒவ்வொரு பேச்சாளருக்கும் 10 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்க முடிந்த இக்கட்டான நிலை.

எனினும், ஒதுக்கப்பட்ட நேரத்திலும் அடைமழை போல கருத்துகளை பொழிந்த மாண்புமிகு அமைச்சர்கள் - சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் - கழக நிர்வாகிகள் - திராவிட இயக்கப் பேச்சாளர்களுக்கு இளைஞரணியின் நன்றிகள்.

நமது தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, உரையாற்றிய பேச்சாளர்களிடமிருந்து அவர்களின் முழு உரைகளை எழுத்து வடிவில் கேட்டுப் பெற்று 'முரசொலி'யில் வெளியிட ஏற்பாடு செய்யவுள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தின் கம்பீரக் கொடியினை சேலத்துச் சிங்கம் வீரபாண்டியார் நினைவு கொடி மேடையில் ஏற்றி வைத்த கழகத் துணைப் பொதுச் செயலாளர் - அத்தை கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், மாநாட்டு வெற்றியைப் பார்த்து பூரித்து உரை நிகழ்த்திய கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் மாமா அவர்களுக்கும், பொருளாளர் டி.ஆர். பாலு மாமா அவர்களுக்கும் என் நன்றிகள்.

திராவிட இயக்க மாநாடுகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள்தான், நாட்டின் எதிர்காலச் சட்டங்கள் என்பார்கள். அந்த வகையில் நமது மாநாட்டுத் தீர்மானங்கள் அத்தனையும் ஆதிக்கத்தையும் - பாசிஸ்ட்டுகளையும் குறிவைத்துத் தாக்கும் கொள்கை ஏவுகணைகள்.

அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் அத்தனையும் கரவொலி எழுப்பி நிறைவேற்றி தந்த எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய இளைஞர் அணியின் மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 25 தீர்மானங்களையும், மாநிலம் முழுக்க பொதுக்கூட்டங்களின் வாயிலாக மக்களிடம் கொண்டு சேர்க்கவுள்ளோம்.

'நீட்' ஒழிப்பு என்பது கழகத்தின் உரிமை முழக்கமாக மாறியுள்ள சூழலில், களத்திலும் - இணையத்திலும் "நீட் விலக்கு; நம் இலக்கு" என 85 லட்சம் கையெழுத்துகளைப் பெற்றிருந்தோம். அவற்றில் அஞ்சல் அட்டைகளில் நாம் பெற்ற கையெழுத்துகளை மாநாட்டு மேடையில் நம் தலைவர் அவர்களின் கரங்களில் ஒப்படைத்தோம்.

அவை, மாண்புமிகு இந்தியக் குடியரசுத்தலைவர் அவர்களிடம் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கையெழுத்து இயக்கத்தில் பங்கேற்று உழைத்த கழக நிர்வாகிகள் - இளைஞர் அணி - தகவல் தொழில்நுட்ப அணி - மாணவரணி - மருத்துவ அணி உள்ளிட்ட அனைத்து அணிகளுக்கும், பேரலையாகத் திரண்டு வந்து கையெழுத்திட்ட தமிழ்நாட்டு மக்களுக்கும் என் அன்பும், நன்றியும்.

மேலும், மாநாட்டுத்திடல் மட்டுமன்றி சேலம் மாவட்டம் முழுவதுமே பாதுகாப்புப் பணிகளை ஒருங்கிணைத்த காவல்துறை அதிகாரிகள் - அலுவலர்கள் மாநாட்டிற்கான தன்னார்வலர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

மாநாட்டுத்திடலில் சமையற்கூடத்தில் பணியாற்றிய வர்கள் - உணவு பரிமாறியவர்கள் - ஒலி - ஒளி அமைத்தவர்கள் அனைவருக்கும் என் நன்றி.

**நேற்று வரை நமது மாநாடுதான் தமிழ்நாட்டின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் மாநாடு பெற்ற பிரம்மாண்ட வெற்றியின் விளைவு, நாடாளுமன்றத் தேர்தலில் நமது கழகம் பெறப்போகிற மாபெரும் வெற்றி எல்லோரின் எதிர்பார்ப்பாக மாறியிருக்கிறது.**

**எனவே, மாநாடு முடிந்து விட்டது, சிறிது நேரம் ஓய்வெடுக்கலாம் என்று இளைஞர் அணி தோழர்கள் எண்ணிவிட வேண்டாம். நாடாளுமன்றத் தேர்தல் மிக அருகில் வந்துவிட்டது .**

**இதுவரை உழைத்துவிட்டு இனி ஓய்வெடுத்தால் அது; முயல் - ஆமை கதையாய் முடிந்து விடும். உங்களின் சுறுசுறுப்பை நீங்கள் மேலும் கூட்ட வேண்டும்.**

**நமது மாநாட்டின் நோக்கம் "மாநில உரிமை மீட்பு". அந்த நோக்கத்தை நாம் வென்றாக வேண்டும் என்றும்.**

**இன்னார்க்கு இன்னது என்று சொல்லும் பாசிஸ்ட்டுகளையும் - அவர்களுக்கு ஆமாம் சாமி போடும் அடிமைகளையும் தேர்தல் களத்தில் வீழ்த்திடுவோம். "எல்லாருக்கும் எல்லாம்" எனும் "திராவிட மாடல்" தத்துவம் இந்திய ஒன்றியம் முழுவதும் பரவுகின்ற வகையில் அயராது உழைக்க இளைஞரணி மாநாடு எல்லோருக்கும் உத்வேகம் தந்திருக்கிறது.**

மத அரசியலா - மனித அரசியலா? மனு நீதியா சமூக நீதியா? மாநில உரிமையா? - பாசிச அடக்குமுறையா? என ஒரு கைபார்த்துவிடுவோம். வெல்லப்போவது சமூக நீதியும் - சமத்துவமுமே என்பதை இளைஞர் அணி மாநில மாநாடு நமக்கு கோடிட்டு காட்டியிருக்கிறது.

இந்த நேரத்தில் மாநாட்டில், தலைவரின் உரையிலிருந்து இந்த தேர்தல் நேரத்தில் நான் அடிக்கோடிட்டு காட்ட விரும்பும் கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

**★ நாடும் நமதே, நாற்பதும் நமதே.**

**★ "இந்தியா" கூட்டணி வென்றால் கலைஞரின் முழக்கமான "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்பது இந்தியாவின் முழக்கமாகும்.**

**★ நரேந்திர மோடி 2 முறை பிரதமராகி இருக்கிறார். அந்த இரண்டு தேர்தல்களிலும் தமிழ்நாட்டு மக்கள் அவரை ஏற்கவில்லை. இப்போது 3ஆவது முறையும் தமிழ்நாடு அவரை ஏற்கப் போவதில்லை.**

**இந்த வார்த்தைகள் மூலம், நமக்கு வழிகாட்டுதலையும் உற்சாகத்தையும் நமது கழகத் தலைவர் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்துள்ளார்கள்.**

**முக்கியமாக கழகத்தலைவர் அவர்கள் கூறிய இன்னொரு கருத்தையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.**

**"இந்த மாநாட்டில் கூடியிருக்கும் உங்களையெல்லாம் பார்க்கும் போது நான் லட்சம் இளைஞர்களின் சக்தியை பெறுகிறேன். இங்கே உதயநிதி மட்டுமல்ல, இங்கு வந்திருக்கும் ஒவ்வொருவரும் என்னுடைய மகன்தான். திராவிட இயக்கத்தின் கொள்கை வாரிசுதான்," என்று சொன்னார்களே, அதுதான் என்னை பொறுத்தவரை, நமது மாநாட்டு வெற்றியின் அளவீடு.**

**லட்சம் இளைஞர்களின் சக்தியை நமது தலைவர் அவர்கள் பெற்றுவிட்டார்கள். அவரின் சக்தியை நாம் ஒவ்வொருவரும் பெறுவோம். தேர்தல் களத்தில் உழைப்போம்!**

மாநாட்டின் வெற்றி, 2024 மக்களவைத் தேர்தலிலும் எதிரொலிக்கட்டும்.

பாசிஸ்டுகளுக்கு முடிவுகட்டி - அடிமைகளைப் புறந்தள்ளி "இந்தியா" கூட்டணியின் வெற்றியை நமது தலைவர் அவர்களின் கரங்களில் சேர்ப்போம்!

நன்றி!

**உங்கள்**
**உதயநிதி ஸ்டாலின்**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.1.2024) தலைமைச் செயலகத்தில், ஜப்பான் நாட்டின் Ehime Prefecture கவர்னர் நாகாமுரா டோகிஹிரோ (Mr. Nakamura Tokihiro), பேரவைத் தலைவர் டாகாயாமா யாசுஹிடோ (Mr. Takayama Yasuhito), தொழில்துறை கொள்கை பிரிவு மேலாண்மை இயக்குநர் மாட்சுடா யுஹிகோ (Mr. Matsuda Yuhiko), சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு துணைத் தூதர் டாகா மாசாயுகி (Mr. Taga Masayuki) ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் 22.01.2024 தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சுதந்திர போராட்ட வீராங்கனை குயிலி அவர்களுக்கு திருவுருவச் சிலை, சுதந்திரப் போராட்ட வீரர்கள் ”வாளுக்குவேலி அம்பலம்” மற்றும் வெண்ணி காலாடி ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள், அண்ணல் காந்தியடிகள் தோழர் ஜீவா ஆகியோரின் சந்திப்பின் நினைவாக சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிராமத்தில் அரங்கம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் 22.01.2024 தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 96 கோடியே 75 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், கலையரங்கம், விருந்தினர் மாளிகை, உடற்பயிற்சிக்கூடம், அணுகுசாலை, விடுதிகள், பணிமனைகள், கழிவறைகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டடம் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், தொழில் நுட்பக்கல்வி ஆணையர் கே. வீர ராகவ ராவ், கல்லூரி கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) முனைவர் கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.1.2024) முகாம் அலுவலகத்தில், 2024 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்க அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, உறுப்பினர்கள் தலைமைக் கழகச் செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக விவசாய அணிச் செயலாளர் தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், கழகச் சொத்துப் பாதுகாப்புக் குழுச் செயலாளர் அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, கழக வர்த்தகர் அணி துணைத் தலைவர் அரசு தலைமைக் கொறடா கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என். ராஜேஸ்குமார், எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி. எழிலரசன், மருத்துவர் நா. எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



சென்னை அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் கூட்ட அரங்கில் நேற்று (23.1.2024) 2024 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்க அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி தலைமையில், உறுப்பினர்கள் தலைமைக் கழகச் செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக விவசாய அணிச் செயலாளர் தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், கழகச் சொத்துப் பாதுகாப்புக் குழுச் செயலாளர் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர், அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, கழக வர்த்தகர் அணி துணைத் தலைவர் அரசு தலைமைக் கொறடா கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என். ராஜேஸ்குமார், எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி. எழிலரசன், மருத்துவர் நா. எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ஆகியோர் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில்

# 71 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.24-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ரூ.21.81 கோடி செலவிலான 16 நவீன நெல் சேமிப்புத் தளங்களைத் திறந்து வைத்து, 71 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 21 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 நவீன நெல் சேமிப்பு தளங்களை திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 71 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தியாகும் நெல்லைக் கொள்முதல் செய்து அரவைக்கு அனுப்புவதில் ஒரு நெல் மணிகூட வீணாகக்கூடாது என்ற முதலமைச்சர் அவர்களின் ஆணைக்குச் செயல் வடிவம் கொடுத்திடும் வகையில், 2022-23-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பத்து மாவட்டங்களில் பதினெட்டு இடங்களில் மொத்தம் 2,86,350 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் மொத்தம் ரூ.238.07 கோடி மதிப்பீட்டில் நிறுவ ஆணையிடப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 190 சேமிப்பு தளங்கள் முதலமைச்சர் அவர்களால் 11.02.2023 மற்றும் 25.04.2023 ஆகிய நாட்களில் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டன.

**16 நவீன நெல் சேமிப்பு தளங்களை திறந்து வைத்தல்**

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் மயிலாடுதுறை மாவட்டம், எடமணல் கிராமத்தில் 21 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் சாலை வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள 16,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய 16 நவீன நெல் சேமிப்புத் தளங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!**

மழைக்காலங்களில் விவசாயிகளுடைய உழைப்பில் விளைந்த நெல்மணிகள் சேதமடையாமல் காத்திடும் வகையில் இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021லிருந்து இதுநாள் வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் மொத்தம் 219.92 கோடி ரூபாய் செலவில் 2.75 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 206 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 71 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக மூன்று நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களால் வழங்கப்பட்ட ஒரு நாள் ஊதியமான ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு முதலமைச்சர் அவர்களிடம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ். பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மாணவர் அணி மாவட்ட,மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 29.01.2024 திங்கட்கிழமை, காலை 10.00 மணியளவில், கோவை, பீளமேடு, காளப்பட்டி சாலை “சுகுணா கலையரங்கில்”, எனது தலைமையில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., சிறப்புரையாற்றிட, மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி - இணைச் செயலாளர்கள் பூவை ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதாசின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அதுபோது மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** 1.01.02.2024 அன்று, சென்னையில் யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பின் சார்பில் நடைபெற உள்ள மாபெரும் மாணவர் பேரணி 2) கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மாநில அளவிலான பேச்சு மற்றும் கட்டுரை இறுதிப் போட்டி 3) மாணவர் அணி ஆக்கப் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.01.2024

**சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## ஈரோடு இறைவன், மயிலாடுதுறை அருள்தாஸ் சிறப்புரை!

திருவண்ணாமலை, ஜன. 24 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு மாநில இலக்கிய அணி இணைச் செயலாளர் கவிஞர் ஈரோடு இறைவனும், மயிலாடுதுறை அருள்தாசும் சிறப்புரையாற்றுகிறார்கள்.

நாளை (25.01.2024 - வியாழக்கிழமை) மாலை 6.00 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோவிலூர் ரோடு, திருவள்ளுவர் சிலை அருகில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் காலேஜ் கு.ரவி தலைமை வகிக்கிறார்.

மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.வெங்கடாஜலபதி, ஆ.மாதேஸ்வரன், தே.தேவேந்திரன், கல்லூரி மாணவர் தி.மு.க.வைச் சேர்ந்த பரணி, க.லோகேஷ், ஆ.பாசில், ஏ.பூவரசன்,

இரா.தினேஷ், ஏ.சுந்தர், கோ.சதீஷ்குமார், ச.யோகேஷ், அ.சந்தோஷ், எ.அரி, ஏ.சக்திவேல், தமிழ்நாடு மாணவர் மன்றத்தைச் சேர்ந்த எஸ்.தீனா, என்.பிரவீன், கே.கதிரவன், பி.கண்ணன், ஏ.ஆத்யா, ஜி.துரோணாச்சாரி, என்.தினேஷ், வீ.சீனுவாசன், எஸ்.லோகேஸ், வி.பிரபா, மனோ. இ.முத்து ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட துணை அமைப்பாளர் வழக்கறிஞர் முனைவர் மு.க. கௌதமன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு மாநில இலக்கிய அணி இணைச் செயலாளர் கவிஞர் ஈரோடு இறைவன் அவர்களும், தலைமைக் கழக பேச்சாளர் மயிலாடுதுறை அருள்தாஸ் அவர்களும் சிறப்புரையாற்றுகிறார்கள்.

பொதுக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால், கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.ஸ்ரீதரன்,

பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், விஜயலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன்,

நகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன், செய்தித்தொடர்பு இணைச் செயலாளர் சிவ.ஜெயராஜ், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் பாரதிராமஜெயம்,

தெற்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், விஜி(எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா. கார்த்திகேயன், பிரவீன் ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே. ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா,

ஒன்றியச் செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த. ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ்,

சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர். வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த. செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ. கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி. கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப. முருகையன், மு.அன்பழகன்,

எம்.சீனு வாசன், நகர மன்றத் தலைவர் நிர்மலாவே ல்மாறன், ஒன்றியக்குழுத் தலைவர்கள் கலைவாணிகலைமணி, பரிமளாகலையரசன், பூ.அய்யாகண்ணு, தமயந்திஏழுமலை, சாந்தி பெருமாள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.திலீப்குமார் மற்றும் நகர நிர்வாகிகள், சி.சண்முகம், மு.கருணா மூர்த்தி, வட்டி அருணாசலம், ஜீவ ரேகாவிஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு. எஸ்.பிரபு,

ஹக்கிம்சேட் மற்றும் பேரூராட்சி மன்றங்களின் தலைவர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் இரா.மின்னல்.கமல் நன்றி கூறுவார். முன்னதாக அம்பேத்கர் வழங்கும் மாவட்ட தி.மு.க. கலைக் குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.





மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
சென்னை - செங்கல்பட்டு - திருவள்ளூர் மாவட்டங்களில்
மிக்ஜாம் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண பணிகளில்
படகில் ஈடுபட்ட 1200 மீனவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கி

# பாராட்டு விழா

நாள் : 24.01.2024 புதன்கிழமை காலை 11 மணி / இடம் : ஒய்.எம்.சி.ஏ. மைதானம், இராயப்பேட்டை, சென்னை.






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களின் ஆணைக்கிணங்க

மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
**அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்**
அவர்களின் தலைமையில்

மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
## திரு. உதயநிதி ஸ்டாலின்
அவர்கள் பாராட்டு சான்றிதழ் வழங்கி விழா பேருரையாற்றி சிறப்பிப்பார்கள்

முன்னிலை

**மா.சுப்பிரமணியன்**
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

**பி.கே.சேகர்பாபு**
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

**நே.சிற்றரசு**
சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர், சென்னை பெருநகர மாநகராட்சி திட்டப்பணிகள் நிலைக்குழு தலைவர்

நிகழ்ச்சிக்கு வருகை தரும் அனைவரையும் வருக. வருக. என வரவேற்று மகிழும்

# தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க.


ARASU ARTS
கலைஞர் 100 1924 - 2024
நாள் : 24.01.2024,
புதன்கிழமை,
காலை 10.00 மணி
இடம் : கீழக்கரை,
அலங்காநல்லூர்,
மதுரை.
கலைஞர் நூற்றாண்டு
ஏறுதழுவுதல் அரங்கம்
துவக்க விழாவிற்கு
வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வணங்கி அன்புடன் வரவேற்கும்
மதுரை மாவட்ட தி.மு.க.


வாரிசு அரசியல் எனும் கூச்சல்களை
வெற்றுக்கூச்சலாக்கி
வெற்றி கண்ட மாநாடு !
உமக்கு இது முதல் மாநாடு, சாதனைப்படைக்க மாநாடு
உலக சாதனைப் படைத்த மாநாடு !
சேலத்தில் வரிப்புலிகளின் பட்டாளம்
கொள்கை வாரிசின் பின்னால்
திராவிடமாடல் கொடிநாட்ட புறப்பட்டன
செங்கோட்டையில் !
இளந்தலைவரே
வாழ்க ! வளர்க !
கலைஞர்
100
1924 - 2024
அன்புடன் : வழக்கறிஞர்
இ.பரந்தாமன் பி.ஏ.பி.எல்.,எம்.எல்.ஏ.
கழக சட்டத்துறை இணைச் செயலாளர் - எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
நம்ம
EGMORE



தமிழரின் வீர விளையாட்டை ஊக்குவிப்போம்.
எக்காலத்திலும் பண்பாட்டைக் காப்போம்.






வரவேற்று மகிழும்

**இ. பெரியசாமி**
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் – கழக துணைப் பொதுச்செயலாளர்

**அர. சக்கரபாணி**
உணவு (ம) உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்

**I.P. செந்தில்குமார்**
பழனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர்

# திண்டுக்கல் மாவட்ட தி.மு.க.





தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், நேற்று முன்தினம் (22–01–2024) மாலை 5.00 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டம் துவங்கிடும் முன்பு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்துவிட்டு கூட்டத்தை துவக்கினர். இதில், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழகப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

# சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமக் கூட்டம்!

சென்னை, ஜன.24-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (22.01.2024) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 277 ஆவது குழுமக் கூட்டம் நடைபெற்றது.

இக்குழுமக் கூட்டத்தில், சென்னை பெருநகர எல்லைக்குள் நில உபயோக மாற்ற விண்ணப்பங்களின் மீது பரிசீலித்தும் முடிவுகள் எடுக்கப்பட்டன. அமைச்சர் அவர்களால் 2023-2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, நிதி ஒப்புதல் வழங்குவது குறித்தும், திட்டங்களின் மீதான தொடர் நடவடிக்கைகள் குறித்தும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இக்குழுமக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் (மாதவரம்) எஸ்.சுதர்சனம், (திரு.வி.க.நகர்) பி.தாயகம் கவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, குழும உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கி.வே. செந்தில்குமார்

**சனவரி 24 (2010)**



**இளம்பிராயத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, இரண்டு முறை கும்மிடிப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்க துணைத் தலைவராகவும், காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட விற்பனைக் குழு இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக ஜெ. அரசால் தலைவர் கலைஞர் கைது செய்யப்பட்ட போது, மறியலில் ஈடுபட்டதற்காக இரண்டு மாதத்திற்கும் மேலாக சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

தைப்பூச விழா

## பழனியிலிருந்து பல்வேறு நகரங்களுக்கு சிறப்பு பேருந்துகள்!

திண்டுக்கல், ஜன. 24–

பழனியில் தைப்பூச திருவிழா 25.01.2024 அன்று நடைபெறவுள்ளது. திண்டுக்கல் மதுரை, திருச்சி, காரைக்குடி, நத்தம், புதுக்கோட்டை, தேனி, கரூர், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் ஆகிய இடங்களிலிருந்தும் அதனைச் சார்ந்த பகுதிகளிலிருந்தும் பழனிக்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதினை முன்னிட்டு பக்தர்களின் தேவைக்கேற்ப இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து பழனிக்கும், பழனியிலிருந்து மேற்குறிப்பிட்ட இடங்களுக்கும் 22.01.2024 முதல் 28.01.2024 வரை அதிக அளவு சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.


பழனி தைப்பூச திருவிழாவிற்கு 350 சிறப்புப் பேருந்துகளும், மேலும் தேவைக்கேற்ப அதிக பேருந்துகளும் மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து இப்போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பழனி செல்லும் பக்தர்களின் சுகமான பயணத்திற்கும் உடனடி தொடர்புக்கும், திண்டுக்கல், பழனி, திருச்சி, மதுரை, காரைக்குடி, புதுக்கோட்டை, தேனி, கரூர், நத்தம் ஆகிய பேருந்து நிலையங்களில் பக்தர்களுக்கு உதவிடவும் வழிகாட்டவும் அலுவலர்கள்ஃபயணச்சீட்டு ஆய்வாளர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இப்போக்குவரத்துக்கழகம் மூலம் பொதுமக்கள் மற்றும் பயணிகள் சிரமமின்றி பயணம் செய்ய ஏதுவாக அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் மூலம் (OTRS) WWW. tnstc.in Website, Mob App மற்றும் இணைய சேவை வழியாக முன் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

---

## ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுங்கள்!



சாதியை எதிர்த்து
போராடுங்கள் ; அது
ஜனநாயகத்திற்கு எதிரி
என்பதால் !
மூடநம்பிக்கையை
எதிர்த்துப் போராடுங்கள்;
அது அறிவியலுக்கு எதிரி
என்பதால் !
ஆதிக்கத்தை எதிர்த்துப்
போராடுங்கள்; அது
சுதந்திரம் – சமத்துவம்
சகோதரத்துவத்திற்கு
எதிரி என்பதால் !

**–பேரறிஞர் அண்ணா...**

---

ஆளுநர் – பா.ஜ.க.வினர் பரப்பிய பொய்களை புறந்தள்ளி

# மதவெறி அரசியலை தீர்மானகரமாக நிராகரித்திருக்கும் தமிழ்நாட்டு மக்கள்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு!

சென்னை, ஜன. 24-

ஆளுநர் - பா.ஜ.க.வினர் கூசாமல் பொய்களை பரப்பியதை புறந்தள்ளி, மதவெறி அரசியலை தீர்மானகரமாக நிராகரித்தனர் தமிழ்நாட்டு மக்கள் இது வரவேற்கத்தக்க ஒன்று என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து 23.01.2024 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சி நிரலின்படி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோவில் கட்டப்பட்டு பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த கோவில் திறப்பு விழா என்பது முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் ஆதரவோடு ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. நிகழ்ச்சியாக நடத் தப்பட்டுள்ளதேயன்றி ஆன்மிகத்திற்கு இந்த விழாவில் துளியும் தொடர்பில்லை.



தீக்கதிர்
2024 ஜனவரி 23 செவ்வாய்க்கிழமை
படுதோல்வி அடைந்த பாஜக சதி

ஆர்எஸ்எஸ் நிகழ்ச்சி நிரலின்படி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோவில் கட்டப்பட்டு பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த கோவில் திறப்பு விழா என்பது முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் ஆதரவோடு ஆர்எஸ்எஸ்- பாஜக நிகழ்ச்சியாக நடத்தப்பட்டுள்ளதேயன்றி ஆன்மீகத்திற்கு இந்த விழாவில் துளியும் தொடர்பில்லை.

அயோத்தி கோவில் திறப்பு விழாவை முன்னிட்டு தமிழக பாஜகவும், ஆளுநர் ஆர். என்.ரவியும் தமிழ்நாட்டில் பதற்றத்தையும், மதப் பகைமையையும் ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுள்ளன.

அயோத்தி கோவில் திறப்பு விழாவை முன்னிட்டு தமிழக பா.ஜ.க.வும், ஆளுநர் ஆர்.என்.ரவியும் தமிழ்நாட்டில் பதற்றத்தையும், மதப் பகைமையையும் ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுள்ளன. அயோத்தி கோவில் திறப்பு விழாவை தமிழக மக்கள் கண்டு கொள்ளாத ஆத்திரத்தில் பா.ஜ.க. வினரும், தமிழக ஆளுநர் மட்டுமின்றி புதுச்சேரி துணை நிலை பொறுப்பு ஆளுநர் தமிழிசை சவுந்தரராசனும் உண்மைக்குப் புறம்பான பல்வேறு செய்திகளை கொஞ்சம் கூட கூச்ச மில்லாமல் பரப்பினர்.

திங்களன்று இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களை திறக்கக்க கூடாது என்றும், வழக்கமான பூஜைகள் நடத் தக்கூடாது என்றும் அன்னதானம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்ததாக இவர்கள் பொய் பரப்பினார்கள். ஆனால் அது உண்மையல்ல. அனைத்து கோவில்களிலும் வழக்கமான வழி பாட்டு முறைகள் தடையின்றி நடைபெறும் என இந்து சமய அறநிலையத்துறை தெளிவுபடுத்தியது. தமிழ்நாட்டில் உள்ள கோவில்களை பா.ஜ.க.வின் தேர்தல் பிரச்சார மேடையாக பயன்படுத்த அவர்கள் மேற்கொண்ட முயற்சி பலிக்கவில்லை. தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சென்னையில் உள்ள கோதண்டராமசாமி கோவி லுக்கு சென்றதாகவும், அங்குள்ள அர்ச்சகர்களும், ஊழியர்களும் அச்சுறுத்தப்பட்டு பயத்து டன் காட்சியளித்ததாகவும் கூசாமல் பொய் கூறினார். ஆனால் அந்தக் கோவில் அர்ச்சகர்கள் தங்களுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என தெளிவுபடுத்திவிட்டனர். ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், காஞ்சி காமாட்சியம்மன் கோவிலில் காணொலி காட்சி ஒளி பரப்பதடை விதிக்கப்பட்டதாக கூறினார்.

ஆனால் அத்தகைய அனுமதி எதுவும் கோரப்படவில்லை என மாநில முதல்வர் மு.க.ஸ்டாலின் தெளிவுபடுத்தியுள்ளார். வதந்திகளை பரப்பாதீர்கள் என சென்னை உயர்நீதிமன்றமே அறிவுறுத்தியுள்ளது. அயோத்தி கோவில் திறப்பு விழாவைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் அரசியல் செய்ய முயன்ற பா.ஜ.க. வினர் படுதோல்வியடைந்துள்ளனர். தமிழ் நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்த போதும், மதவெறி அரசியலை தீர்மானகரமாக நிராகரித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

வேலூர் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிக்கை

வேலூர்,ஜன.24-

மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திடும் வகையில் தி.மு.க. மாணவரணி சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 தேதி அன்று பொதுக்கூட்டம் நடத்துவது வழக்கமான ஒன்றாகும். இது குறித்து வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டப் பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.



தி.மு.க. மாணவர் அணியினர் முன்னெடுத்த இந்தி எதிர்ப்பு போராட்டங்களில் தமிழ்நாடு முழுவதும் பெரும்கொந்தளிப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி தமிழ்மொழியை காத்திட தங்களது இன்னுயிரையும் பலிகொடுக்க முன்வந்து அதன் அடிப்படையில் நடராசன், தாளமுத்து, கீழப்பழூர் சின்னசாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், கீரனூர் முத்து, மாணவர் ராஜேந்திரன், சத்தியமங்கலம் முத்து, ஐய்யம்பாளையம் வீரப்பன், விராலிமலை சண்முகம், பீளமேடு தண்டபாணி, மயிலாடுதுறை சாரங்கபாணி ஆகிய 12 கழகத் தோழர்கள் இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து தாய்மொழியாம் தமிழை காத்திட தங்களது உடலில் தீ வைத்துக்கொண்டு இன்னுயிரை ஈந்து தியாகம் செய்துள்ளார்கள். இப்பேர்ப்பட்ட தியாக மறவர்களின் தியாகத்தை போற்றிடும் வகையில்

வேலூர் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் நாளை (25.01.2024 வியாழக்கிழமை) வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் மாபெரும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ் தலைமையில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.பிரபாகரன், அரவிந்த்அசோகன் ஆகியோர்கள் வரவேற்புரையில் மற்றும் மொழிப்போர்த் தியாகி கோ.மாசிலாமணி, டி.சுந்தர், வி.விக்ரம், எம்.ஹரிநாத், பி.ஸ்ரீதேவி ஆகியோர்கள் முன்னிலையில் கழக துணை அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் சிறுவனூர் பரசுராமன் ஆகியோர்கள் சிறப்புரை ஆற்றிட உள்ளார்கள். மேலும் மாவட்ட அவைத்தலைவர், கழக தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகரச் செயலாளரும், வேலூர் சட்டமன்ற உறுப்பினருமான ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புசாரா ஓட்டுனர் அணி தலைவர் து.மு. கதிர்ஆனந்த் எம்.பி., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர், மாநில மகளிர் பிரச்சாரகுழு அணிச் செயலாளர் அமலுவிஜயன் எம்.எல்.ஏ. ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

எனவே மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணைச் செயலாளர்கள், மாவட்ட அணிகள் உள்ளிட்ட நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊர்கிளை நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் கழக முன்னோடிகள் மொழிப்போர்த் தியாகிகள், மாணவர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழ்நாட்டையும், தமிழ்மொழியையும், தமிழர்களையும் காத்திட உயிர் தியாகம் செய்த தியாக மறவர்களுக்கு வீரவணக்கம் செலுத்திடும் வகையில் மேற்படி தேதி மற்றும் நிகழ்விடத்தில் நடைபெற உள்ள பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அன்னாரின் தியாகத்தை போற்றுவோம்.

இவ்வாறு வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. மோகனதாசன்

**சனவரி 24 (2012)**



**கழகம் ஆரம்பித்த காலத்தில், சீர்காழி வட்ட துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து, தொடர்ந்து கொள்ளிடம் ஒன்றியக் கழகத்தின் முதல் செயலாளராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட துணைச் செயலாளராகவும், நாகை மாவட்டக் கழக அவைத்தலைவராகவும் – துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**பூம்புகார் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கொண்டல் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராகவும், கூட்டுறவு வங்கித் தலைவராகவும், சீர்காழி நிலவள வங்கித் தலைவராகவும், மாநில நிலவள வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**“பல தியாகங்களைச் செய்து, பலமுறை சிறை சென்று, எந்தச் சூழ்நிலையிலும் என்பால் கொண்ட அன்பை மறவாமல் என்னோடு பாசத்தோடு பழகி வருகின்ற தம்பி” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தக்கலை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ஆர். ரமேஷ்பாபு, கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப் படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.01.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.ராமச்சந்திரன்

**சனவரி 24 (2011)**



**கழகம் துவங்கிய காலம் முதல் கழகப் பணியாற்றியவர்.**

**வடபெரும்பாக்கம் கிளைக் கழக அவைத் தலைவராக இருபது ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**சாலைப் பணியாளர்கள் சங்க கமிட்டி உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

நாளை (ஜன.25) - மொழிப்போர்த் தியாகிகளுக்கு


# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

## சென்னையில் முதல்வர் - **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்**, ஆவடி - பொதுச்செயலாளர் **துரைமுருகன்**, மன்னார்குடி - பொருளாளர் **டி.ஆர்.பாலு**, திருச்சி - முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு!**









**இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்**
**எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!**
**செந்தமிழுக்குத் தீமைவந்த பின்னும் - இந்தத்**
**தேகம் இருந்தொரு லாபமுண்டோ?**
**விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி! - அது**
**வீரத் தமிழ் மக்கள் ஆவி என்போம்!**

**சிங்கமென்ற இளங்காளைகளே - மிகத்**
**தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே!**
**பங்கம் விளைத்திடல் தாய்மொழிக்கே - உடற்**
**பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!**

**-பாவேந்தர்**

- பெரும் சிறப்புப் பெற்ற நம் தாய் மொழியாம் தமிழ்மொழி, நீராலும் - நெருப்பாலும், வஞ்சகர்களின் வெறுப்பாலும் வெல்லமுடியாத - வீழ்த்த முடியாத செம்மாந்த மொழியாகும்! தத்தமது உரைநடையின் வாயிலாகவும், கவிதைத் தீரமுடனும் தமிழறிஞர்கள்பலர் தங்கள் விழியெனப் போற்றி வளர்த்த வண்டமிழ் மொழியாகும்.

- 1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி இந்தி கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய் மொழியைக் காக்க இந்தித் திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய் மொழி காக்க களம் கண்டனர்.

அப்போது, 14 வயதே ஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, "கயல், வில், புலி" சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

**"ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! - நீ**
**தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!"**

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர்வீரராய் முன்வந்தார்.

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன் 15.01.1939 அன்றும்; தாளமுத்து 12.03.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர்.தமிழக மக்களின் தொடர் போராட்டத்தினால், அரசு 21.02.1940-ல் கட்டாய இந்தித் திணிப்பைக் கைவிடும் முடிவுக்கு வந்தது.

தாராளமாகவும் - ஏராளமாகவும் தமிழ்ச் சொற்கள் இருந்தும், பிறமொழிச் சொற்கள் கலந்து பேசியும், எழுதியும் தமிழுக்கு ஊறு விளைத்திட முனைந்தோர், முடிந்தளவு முயன்றும், 'யாதொன்றும் புரிந்திட இயலாது', என்று முடங்கிடும் நிலையில், என்றென்றும் மாறாத இனிமைத் தமிழுக்கு ஒன்றிய அரசால் ஆபத்து வரவிருந்தபோது,

**"செந்தமிழுக்கு தீங்கொன்று வந்துற்ற பின்னும் - இத்**
**தேகம் இருந்தென்ன லாபம்?"**

என, தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்ட அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்களாம் - கீழப்பழூவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன், கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்தும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரின் தீரத்தை நினைவு கூர்ந்திடும் நாள்தான், வருகிற 25.01.2024 மொழிப் போர்த் தியாகிகள் நினைவு தினம் ஆகும்.

உலக வரலாற்றில், நாட்டின் விடுதலைக்காக, இனப் போராட்டத்திற்காக தங்களை மாய்த்துக் கொண்டோர் நிரம்ப உண்டு. ஒரு மொழிக்காக, தங்களது வாழ்க்கையையே சுருக்கிக் கொண்டு - கருகியவர்கள் உண்டு என்றால், அது தமிழ் மக்களையே சாரும்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் வந்த நமது கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், 1972ஆம் ஆண்டு கோவையில், தி.மு.க. மாணவரணியின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றுகின்ற போது...

"மொழிக்காக - நம்முடைய இனத்திற்காகப் போராடுகிறோம். போராடுகிற நேரத்திலே நம்முடைய உயிரை இழக்கிற தியாகத்தைச் செய்வதற்குக் கூடக் காத்திருக்கிறோம். என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, அந்த நான்கு ஆண்பிள்ளைகளில் ஒரு ஆண்பிள்ளை போய் விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயமாக கவலைப்பட மாட்டார். அதுவும், 'மொழிக்காக, ஒரு இனத்திற்காக தனயனை இழந்த தந்தை' -என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டுக் கிடைக்கும். பாராட்டுகின்ற பெருமையை வாங்கித் தந்த மகிழ்ச்சி எனக்குச்சேரும் அல்லவா?"

-என்று வீர உரையாற்றி, தமிழ் மொழிக்காக தனது இன்னுயிரையும் துறப்பது எனக்குப் பெருமை உடையது என, தனது 18-வது வயதில் சபதமேற்று; இன்றும் தமிழ் மொழிக்கான அனைத்துப் போராட்டங்களிலும் தலைமகனாக விளங்குகிறார்.

'இந்தி பேசாத மக்களின் மீது இந்தியைத் திணித்தே தீருவேன்' என்று ஒன்றியத்தில் ஆட்சி நடத்தும் பாசிச பா.ஜ.க. அரசும், அதன் தலைவர்களும் அனைத்து வழிகளிலும் இந்தியைத் திணிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு வந்தால், 'தொன்மையான மொழி தமிழ்' என்று நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்குச் சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள் சமீபத்தில் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "இந்திதான் நாட்டு மக்களை ஒன்றிணைக்கிறது - பிராந்திய மொழிகளுக்கு அதிகாரமளிக்கிறது" என்று இந்தித் திணிப்புக் கூச்சலின் மாற்று வடிவமாகப் பேசியதும், எதிர்ப்பின்றி அனைவரும் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என தொடர்ந்து பேசுவதும் மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்குக் கொத்தடிமை ஆக்கும் எதேச்சாதிகார முயற்சிக்கு பல்வேறு இடங்களில் இருந்து கண்டனங்கள் வந்தது!

மேலும், ஒன்றிய பொதுத் துறை காப்பீட்டு நிறுவனமான "நியூ இந்தியா இன்சூரன்ஸ்" நிறுவனம், தனது ஊழியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், "இந்தியை கட்டாயம் படிக்க வேண்டும் - இந்திப் புத்தகங்களை வாங்க வேண்டும் - இந்தி திறனறிய சோதனைகளை நடத்த வேண்டும்" என நீண்டதொரு இந்தித் திணிப்புக் கான பட்டியலை சுற்றறிக்கை என்ற பெயரில் அனுப்பியதும்,

சமீபத்தில் கோவை விமான நிலையத்தில் மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை வீரர் ஒருவர், தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்ணிடம், இந்திதான் தேசிய மொழி, இது கூடத் தெரியாதா? என 'கூகுள்' செய்து பார்க்கச் சொல்லி வற்புறுத்தி மிரட்டிய அவல நிலையும்;

மத்திய பின்னிருப்புக் காவல் படையினருக்கான (சி.ஆர்.பி.எப்.) வேலை வாய்ப்பு அறிவிப்பில், தேர்வுகள் அனைத்தும் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டு, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில், மொழி உரிமையைக் காக்கவும், இந்தி பேசாத மக்களை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் தி.மு.க. இளைஞர் அணியும், மாணவர் அணியும் இணைந்து அறிவித்த கண்டன ஆர்ப்பாட்டத்தைக் கண்ட ஒன்றிய அரசு, 1965 மொழிப்புரட்சிக் காலம் மீண்டும் தமிழ்நாட்டில் உருவாகி விடுமோ என அஞ்சி, இத்தேர்வை இந்தி மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட 13 பிராந்திய மொழிகளில் நடத்திடவும் ஒப்புக் கொண்டது!

எப்பொதெல்லாம் இந்தித் திணிப்பு தலை தூக்குமோ - அப்பொதெல்லாம் கழகத் தலைவரின் ஆணையேற்று, தி.மு.க. மாணவர் அணியின் புலிப் போத்துகள் சீறிப் பாய்ந்திடத் தயங்கியதில்லை.

இந்தியை எப்படியாவது பின்வாசல் வழியாக திணிக்கத் துடிக்கும் ஒன்றிய அரசு ஒன்றை உணர வேண்டும்; இந்தித் திணிப்புக்கு ஆதரவு தெரிவித்து கைக் கட்டி, வாய் பொத்தி அமைதி காக்க தமிழ்நாட்டில் நடப்பது அடிமைகளின் ஆட்சி அல்ல! பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தும் திராவிட மாடல் ஆட்சி!

இந்தியைத் திணிக்க முயன்றோருக்கும், முயல்வோருக்கும் அச்சத்தை உருவாக்கிவிட்டுச் சென்றுள்ள மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திட, பொதுக்கூட்டங்கள் நடத்தி அவர்கள் கொண்டிருந்த தூய தமிழுணர்வுடன் நாமும் வாழ்ந்திட வேண்டும் என்ற சூளுரையை இந்நாளில் மேற்கொண்டிட, கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் பட்டித்தொட்டி முதல் பட்டினக்கரை வரை, தி.மு.க. மாணவர் அணியின் சார்பில், கீழ்க்காணும் உரையாற்றுவோர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

**தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!**
**தமிழ்நாடு வாழ்க! திராவிட மாடல் ஆட்சி வெல்க!**

**வீரவணக்கம்! வீரவணக்கம்!**
**மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம்!**
**இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**
**ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்!**
**தமிழை வளர்த்து தமிழரைக் காப்போம்!**

**தமிழ்நாடு முழுவதும் உரையாற்றுவோர் பட்டியல்:**

| | |
|---|---|
| அண்ணாநகர் | கழகத் தலைவர் - |
| | மாண்புமிகு **முதலமைச்சர்** அவர்கள். |
| ஆவடி | மாண்புமிகு. பொதுச் செயலாளர் |
| | **துரைமுருகன்** |
| | எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., |
| | சா.மு. நாசர், எம்.எல்.ஏ., |
| | சி. ஜெரால்டு |
| மன்னார்குடி | பொருளாளர் |
| | **டி.ஆர். பாலு, எம்.பி.**, |
| | மன்னை த. சோழராஜன் |
| திருச்சி | மாண்புமிகு. முதன்மை செயலாளர் |
| | **கே.என். நேரு** |
| | கரூர் முரளி |
| | அல்லூர் பி.எம். ஆனந்த் |
| ஆண்டிப்பட்டி | மாண்புமிகு. ஐ. பெரியசாமி |
| | நா. இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., |
| | மீனாகண் இரமேஷ் |
| காஞ்சிபுரம் | முனைவர் க. பொன்முடி |
| | க. சுந்தர், எம்.எல்.ஏ., |
| | நா.சே. பிரபாகரன் |
| நாமக்கல் | ஆ. இராசா, எம்.பி., |
| | என். ராஜேஸ்குமார், எம்.பி., |
| | கம்பம் பாண்டிதுரை |
| தென்காசி | கனிமொழி கருணாநிதி, எம்.பி., |
| | என். ஜெயபாலன் |
| | நாகை மு. சாகுல் அமீது |
| மேட்டூர் | அந்தியூர். ப. செல்வராஜ், எம்.பி., |
| | டி.எம். செல்வகணபதி |
| | நெய்வேலி தங்கம் |
| உளுந்தூர்பேட்டை | ஆர்.எஸ். பாரதி |
| | தா. உதயசூரியன், எம்.எல்.ஏ., |
| | கோமல் விஜய் அறிவழகன் |
| பல்லாவரம் | மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** |
| | மாண்புமிகு தா.மோ. அன்பரசன் |
| இராணிப்பேட்டை | சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. |
| | மாண்புமிகு ஆர். காந்தி |
| | வழக்கறிஞர் எஸ்.எஸ்.ஆர்.சசிகுமார் |
| கும்மிடிபூண்டி | திருச்சி சிவா, எம்.பி., |
| | டி.ஜெ. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., |
| | கதிர் மீனாட்சிசுந்தரம் |
| கடலூர் | டி.கே.எஸ்.இளங்கோவன் |
| | மாண்புமிகு. |
| | எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் |
| | ஆலங்குடி செல்வராஜ் |
| | எஸ்.எஸ்.ஆர். சசிக்குமார் |
| திருச்சி கிழக்கு | மாண்புமிகு. எ.வ. வேலு |
| மாநகரம் | மாண்புமிகு |
| | அன்பில் மகேஷ் பொய்யாமொழி |
| | ஒரத்தநாடு நடராஜன் |
| சேலம் | எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எம்.பி., |
| | ஆர். இராஜேந்திரன், எம்.எல்.ஏ., |
| | சேலம் இரா. தமிழரசன் |
| | ஆம்பூர் பொய்யாமொழி |
| திருவாரூர் | பொன். முத்துராமலிங்கம் |
| | பூண்டி கலைவாணன், எம்.எல்.ஏ., |
| | அ.வெ. அறவரசன் |
| தருமபுரி | மாண்புமிகு கு. பிச்சாண்டி |
| | தடங்கம் பெ. சுப்பிரமணி |
| | திருச்சி ராதாகிருஷ்ணன் |
| திருமங்கலம் | கடலூர் இள. புகழேந்தி |
| | மு. மணிமாறன் |
| | தீக்கனல் கருணாநிதி |
| சிவகங்கை | சுப. வீரபாண்டியன் |
| | மாண்புமிகு. கே.ஆர். பெரியகருப்பன் |
| | போடி கலைசெல்வன் |
| | பூர்ணசங்கீதா சின்னமுத்து |
| புதுச்சேரி | மாண்புமிகு ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் |
| | ஆர். சிவா, எம்.எல்.ஏ., |
| | லயோலா ராஜசேகர் |

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

13-ஆம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| அரியலூர் | மாண்புமிகு முனைவர் கோவி. செழியன் |
| | மாண்புமிகு எஸ்.எஸ். சிவசங்கர் |
| | சென்னை மதிவாணன் |
| வேலூர் | ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ., |
| | ஏ.பி. நந்தகுமார், எம்.எல்.ஏ., |
| | சிறுவனூர் பரசுராமன் |
| சங்கரன்கோயில் | எஸ். ஆஸ்டீன் |
| | ஈ. ராஜா, எம்.எல்.ஏ., |
| | குளித்தலை சலாவுதீன் |
| திண்டிவனம் | பூச்சி எஸ். முருகன் |
| | மாண்புமிகு. கே.எஸ். மஸ்தான் |
| | சென்னை உதயசூரியன் |
| பொன்னேரி | தஞ்சை கூத்தரசன் |
| | முனைவர். நா. சந்திரபாபு |
| | க. எழிலன் |
| அருப்புக்கோட்டை | க. வேங்கடபதி |
| | மாண்புமிகு |
| | கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமசந்திரன் |
| | வழக்கறிஞர் அ. கணேசன் |
| ஈரோடு | குத்தாலம் பி. கல்யாணம் |
| | மாண்புமிகு. சு. முத்துசாமி |
| | தூத்துக்குடி தமிழ்ப்பிரியன் |
| | ஜெ. வீரமணி |
| கள்ளக்குறிச்சி | தி.அ. முகமது சகி |
| | வசந்தம் கார்த்திகேயன், எம்.எல்.ஏ., |
| | இளந்தளிர் இளங்கோ |
| மதுரை | கம்பம் செல்வேந்திரன் |
| | கோ. தளபதி, எம்.எல்.ஏ., |
| | சேலம் ஜான்பாட்ஷா |
| | அதலை பி. செந்தில்குமார் |
| காரைக்குடி | பொள்ளாச்சி மா. உமாபதி |
| | ஆத்தூர் வெங்கடேசன் |
| திருப்பூர் | வழக்கறிஞர் இரா. கிரிராஜன், எம்.பி., |
| | க. செல்வராஜ், எம்.எல்.ஏ., |
| | கோவை. அ. திராவிடமணி |
| திருவள்ளூர் | திண்டுக்கல் ஐ. லியோனி |
| | திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ., |
| | புலவர் சாமிநாகப்பன் |
| திருப்பத்தூர் | முனைவர் சபாபதி மோகன் |
| (வேலூர்) | உடுமலை தண்டபாணி |
| இராமநாதபுரம் | கவிச்சுடர் கவிதை பித்தன் |
| | காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், |
| | எம்.எல்.ஏ., |
| | ஆக்காட்டி ஆறுமுகம் |
| விழுப்புரம் | வாகை சந்திரசேகர் |
| | நா. புகழேந்தி, எம்.எல்.ஏ., |
| | அன்னவயல் கணேசன் |
| கோயம்புத்தூர் | மாண்புமிகு முனைவர் |
| | பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் |
| | நா. கார்த்திக் |
| | தா. ஆதித்தன் |
| | வி.ஜி. கோகுல் |
| விருதுநகர் | முனைவர் தமிழச்சி |
| | தங்கபாண்டியன், எம்.பி., |
| | மாண்புமிகு தங்கம் தென்னரசு |
| | மதுரை சாதுராஜன் |
| நெய்வேலி | உ.மதிவாணன் |
| | எஸ்.கே.ஸ்ரீராம் |
| | பழனி அப்பாஸ் |
| மயிலாடுதுறை | புதுக்கோட்டை விஜயா |
| | நிவேதா முருகன், எம்.எல்.ஏ., |
| | சித்திரைகுடி பாலகிருஷ்ணன் |
| இராசிபுரம் | நாஞ்சில் சம்பத் |
| | ஆவடி அமுதநேசன் |
| வந்தவாசி | மருத்துவர். நா. எழிலன், எம்.எல்.ஏ., |
| | ரஷித்கான் |
| புதுக்கோட்டை | பேராசிரியர் |
| | கான்ஸ்டன்டைன் இரவீந்திரன் |
| | மாண்புமிகு. எஸ். இரகுபதி |
| | மருத்துவர் கலை. கதிரவன் |
| கரூர் | வி.பி. ராஜன் |
| | குடந்தை இரமேஷ் |
| | செந்தாமரை கண்ணன் |
| மதுராந்தகம் | அன்னியூர் சிவா |
| | மங்கலம் பிரபாகரன் |
| கோபிசெட்டிபாளையம் | டி.எம். கதிர் ஆனந்த், எம்.பி., |
| | என். நல்லசிவம் |
| | பாலக்கரை டி. கோவிந்தன் |
| செய்யாறு | நெல்லிகுப்பம் புகழேந்தி |
| | திருச்சி சேகர் |
| பெரம்பலூர் | குத்தாலம் க. அன்பழகன் |
| | குன்னம் இராஜேந்திரன் |
| | கு. மொழிமாறன் |
| திருவண்ணாமலை | கவிஞர் ஈரோடு இறைவன் |
| | மயிலாடுதுறை அருள்தாஸ் |
| நெல்லை | ஏ.கே.எஸ். விஜயன் |
| | டி.பி.எம். மைதீன்கான் |
| | தரமணி ஜெகதீசன் |
| திண்டுக்கல் | தமிழன் பிரசன்னா |
| | ஐ.பி. செந்தில்குமார், எம்.எல்.ஏ., |
| | செந்தூர் பாலகிருஷ்ணன் |
| ஆரணி | வழக்கறிஞர் இ. பரந்தாமன், எம்.எல்.ஏ., |
| | எம்.எஸ். தரணிவேந்தன் |
| | தி.நகர் ச. சண்முகநாதன் |
| விருத்தாசலம் | சூர்யா வெற்றிக்கொண்டான் |
| | மாண்புமிகு. சி.வி. கணேசன் |
| | டாக்டர் அபிபுல்லா |
| சிவகாசி | வழக்கறிஞர் அ. சரவணன் |
| | தமிழ் சாதிக் |
| துறையூர் | கவிஞர் காசிமுத்து மாணிக்கம் |
| | சன்.கோ. ஆறுமுகம் |
| இடங்கணசாலை | வி.பி. கலைராஜன் |
| | ஈரோடு சத்தியாவதி |
| ஒட்டன்சத்திரம் | எஸ்.கே.பி. கருணாநிதி |
| | மாண்புமிகு அர. சக்கரபாணி |
| | ஆம்பூர் தருமன் |
| | கா. பொன்ராஜ் |
| கோவில்பட்டி | இரா. ராஜீவ்காந்தி |
| | மாண்புமிகு கீதா ஜீவன் |
| | முஜ்பூர் ரகுமான் |
| குளித்தலை | ச. தங்கவேல் |
| | பா.கோ. குமார் |
| திருமயம் | கவிஞர் தமிழ்தாசன் |
| | தமிழ்கொண்டான் |
| வேதாரண்யம் | பி.டி. அரசகுமார் |
| | ஏர்போர்ட் பொன்னுசாமி |
| தாராபுரம் | டாக்டர் விஜய் |
| | செங்கல்பட்டு சீனுவாசன் |
| தஞ்சாவூர் | கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி |
| | எஸ். துரைசந்திரசேகர், எம்.எல்.ஏ., |
| | கு. வாஞ்சிநாதன் |
| பாலக்கோடு | பெருநற்கிள்ளி |
| | பி. பழனியப்பன் |
| | தமிழன்பன் |
| செஞ்சி | பூங்கோதை ஆலடி அருணா |
| | உடுமலை தாரை சிவா |
| காங்கேயம் | வி.சி. சந்திரகுமார் |
| | இல. பத்மநாபன் |
| | குமரி பிரபாகரன் |
| நாகர்கோயில் | நந்தனம் நம்பிராஜன் |
| | மேயர் ஆர். மகேஷ் |
| | நெல்லை மணி |
| கிருஷ்ணராயபுரம் | அர. திராவிடம் |
| | கோட்டூர் முருகன் |
| பெருந்துறை | செந்தலை கவுதமன் |
| | ஆற்காடு அகிலன் |
| சோளிங்கர் | விஜயா தாயன்பன் |
| | ஆத்தூர் சபரி |
| தொண்டாமுத்தூர் | கோவி.லெனின் |
| | பாரதி மோகன் |
| | என். இரவி |
| | கோபி. குமணன் |
| ஊட்டி | தமிழ் கா. அமுதரசன் |
| | பா.மு. முபாரக் |
| | காவேரிப்பட்டினம் இளையராஜா |
| நாகப்பட்டினம் | கந்திலி கரிகாலன் |
| | என்.கௌதமன் |
| | குடியாத்தம் புவியரசி |
| போடி | சைதை சாதிக் |
| | துறையூர் பாஸ்கரன் |
| கிருஷ்ணகிரி | முனைவர் பொன்னேரி சிவா |
| | தே. மதியழகன், எம்.எல்.ஏ., |
| | விஷார் க. தமிழரசன் |
| மானாமதுரை | கவிஞர் சல்மா |
| | வழக்கறிஞர் மணிமுடி |
| கீழ்பென்னாத்தூர் | சென்னை அரங்கநாதன் |
| | கலைச்செல்வி ஜெகநாதன் |
| திருத்துறைப்பூண்டி | சோம. செந்தமிழ்செல்வன் |
| | கொரஞ்சூர் முனுசாமி |
| பர்கூர் | போடி. காமராஜ் |
| | வெ. அன்புவாணன் |
| பவானி | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| | புலவர் இராவணன் |
| மேட்டுப்பாளையம் | வேலூர் கென்னடி |
| | தருமபுரி அதியமான் |
| அறந்தாங்கி | ஆரூர் மணிவண்ணன் |
| | வண்ணை புகாரி |
| சிதம்பரம் | ஆடுதுறை உத்திராபதி |
| | கா.வி. நெடுஞ்செழியன் |
| திருப்போரூர் | மனுஷ்யபுத்திரன் |
| | திருவொற்றியூர் கருணாநிதி |
| மேலூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| | மாண்புமிகு. பி. மூர்த்தி |
| | ஈரோடு இளையகோபால் |
| உடுமலைப்பேட்டை | போஸ் வெங்கட் |
| | முரசொலி மூர்த்தி |
| | வேடசந்தூர் முருகவேல் |
| இராஜபாளையம் | ஆவடி பாஸ்கர் |
| | எம்.எல். நாதன் |
| கம்பம் | வேலூர் இரமேஷ் |
| | தாம்பரம் ஜின்னா |
| சீர்காழி | மன்னை சோம. இளங்கோவன் |
| | கரூர் மதி |
| திருச்செங்கோடு | திருப்பூர் மனோகர்பாபு |
| | மதுரா. செந்தில் |
| | குன்னூர் கலீம் |
| கலசப்பாக்கம் | நாத்திகம் நாகராஜன் |
| | எழும்பூர் கோபி |
| விராலிமலை | ஆலந்தூர் ஒப்பிலாமணி |
| | வஹிதா பேகம் |
| தேனி | வரகூர் காமராஜ் |
| | தங்க தமிழ்செல்வன் |
| | கணல் சுப்பிரமணி |
| பல்லடம் | ஜோன்ஸ் ரூசோ |
| | போர்முரசு கதிரவன் |
| பொள்ளாச்சி | வயலூர் கிருஷ்ணமூர்த்தி |
| | தளபதி முருகேசன் |
| | குடந்தை ராமகிருஷ்ணன் |
| குன்னூர் | மாண்புமிகு கா.இராமச்சந்திரன் |
| | கவிஞர் சிவமுத்துவளவன் |
| | வா.சு. முத்துசாமி |
| பேராவூரணி | திருப்பூர் ரஜினி செந்தில் |
| | தீக்கனல் தியாகு |
| ஜெயங்கொண்டம் | சிங்கை பிரபாகரன் |
| | மதுரை சேவியர் |
| பட்டுக்கோட்டை | வே. மதிமாறன் |
| | க. அண்ணாதுரை, எம்.எல்.ஏ., |
| | வீர. வெள்ளைச்சாமி |
| நிலக்கோட்டை | ஆலந்தூர் மலர்மன்னன் |
| | கடையநல்லூர் இஸ்மாயில் |
| விக்கிரவாண்டி | கோவை சம்பத் |
| | புலவர் பெரியாழ்வார் |
| பெரியகுளம் | ஜஸ்டீன் வில்பார்ட் |
| | கோவை இக்பால் |
| திருச்சுழி | உடன்குடி தனபால் |
| | செங்குன்றம் திராவிடமணி |
| மொடக்குறிச்சி | கோதை மதிவாணன் |
| | போலீஸ் ஆல்பிரட்தாஸ் |
| சின்னசேலம் | பிரம்மபுரம் பழனி |
| | ஆவடி கா.மு. ஜான் |
| நன்னிலம் | தஞ்சை காமராஜ் |
| | வேங்கை சந்திரசேகர் |
| செங்கம் | பவானி கண்ணன் |
| | செங்கை சந்தானம் |
| சேந்தமங்கலம் | திப்பம்பட்டி ஆறுச்சாமி |
| | எம்.பி. ஆலன் |
| வாணியம்பாடி | சேப்பாக்கம் பிரபாகரன் |
| | குன்னூர் ஜாகீர் உசேன் |
| குடியாத்தம் | வழக்கறிஞர். சிவ. ஜெயராஜ் |
| | கோவை சௌந்தர் |
| திட்டக்குடி | தஞ்சை கலைமணிபாரதி |
| | பேர்னாம்பட்டு இராஜேந்திர பிரசாத் |
| ஓமலூர் | பசும்பொன் இரவிசந்திரன் |
| | கே.இ. செந்தமிழ் அரசு |
| கும்பகோணம் | சேலம் சுஜாதா |
| | சு. கல்யாணசுந்தரம், எம்.பி., |
| | நாமக்கல் இராஜகோபால் |
| வேடசந்தூர் | மதுரை ஜவகர் |
| | புத்தூர் ஆனந்தன் |
| பூம்புகார் | நளினி சாரங்கன் |
| | எசனை ஆறுமுகம் |
| அரூர் | ஆரணி மாலா |
| | கவிஞர் வீரமுரசு |
| குமாரபாளையம் | பொள்ளாச்சி சித்திக் |
| | எழும்பூர் தேவநிதி |
| பாப்பிரெட்டிபட்டி | ஒசூர் அப்துல் ரஹ்மான் பாரி |
| | கோவை சேரலாதன் |
| திருப்பத்தூர் | தக்கோலம் தேவபாலன் |
| (சிவகங்கை) | வண்ணை மோகன் |
| அரவக்குறிச்சி | திருப்பூர் கூத்தரசன் |
| | ரம்ஜான் பேகம் |
| | கலை கமால் |
| ஒசூர் | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் |
| | ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ., |
| | மதுரை குருசாமி |
| பரமக்குடி | இடிமுரசு மணிமுத்து |
| | நெல்லை மூர்த்தி |
| கமுதி | வழக்கறிஞர் முத்து முத்தையா |
| | நன்னிலம் சந்திரசேகர் |
| ரிஷிவந்தியம் | நெல்லை ரவி |
| | குடியாத்தம் அன்பு |
| ஆலங்குடி | குடியாத்தம் பாரி |
| | கே.வி. ராமகிருஷ்ணன் |
| போளூர் | செங்கை தாமஸ் |
| | காரை கு. அருளானந்தம் |
| வாழப்பாடி | மதுரை அலெக்சாண்டர் |
| | எஸ்.ஆர். சிவலிங்கம் |
| | துறையூர் துரைப்பாண்டி |
| பண்ருட்டி | நாகம்மை கருப்பையா |
| | முகவை ராமர் |
| ஆம்பூர் | கவிஞர் நன்மாறன் |
| | ஈகை தனசேகரன் |
| ஊத்தங்கரை | சேலம் கோவிந்தன் |
| | சைதை பாஸ்கர் |
| நத்தம் | அதிரடி அல்தாப் |
| | பெரம்பலூர் விஜயரத்தினம் |
| மார்த்தாண்டம் | நெல்லை முத்தையா |
| | மாண்புமிகு மனோ. தங்கராஜ் |
| | சிவகாசி ஜீவா |
| வள்ளியூர் | கம்பம் பாண்டியன் |
| | இரா. ஆவுடையப்பன் |
| | சி.பி. சிங்காரவேல் |
| சாத்தான்குளம் | வண்ணை அரங்கநாதன் |
| | மாண்புமிகு அனிதா ராதாகிருஷ்ணன் |
| | முருக்கம் முனுசாமி |
| சாத்தூர் | மார்ஷல் முருகன் |
| | தா. பழூர் இளஞ்செழியன் |
| வேப்பனஹள்ளி | பூங்கா நகர் ஜெ. கண்ணன் |
| | தீக்கனல் செல்வம் |
| சூலூர் | மதுரை சுந்தரராஜன் |
| | ஆசிரியர் அன்புமணி |
| சங்ககிரி | நாகை. நாகராஜன் |
| | மொழிப்போர் காவலர் கு.வெங்கட்ராமன் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி


கலைஞர் நூற்றாண்டு
ஏறுதழுவுதல் அரங்கம்
திறப்புவிழா
நாள்: 24.01.2024
புதன்கிழமை
இடம்: கீழக்கரை,அலங்காநல்லூர்
மதுரை மாவட்டம்.
மானம் தமிழன் கேட்ட தாலாட்டு
வீரம் அவன் ஆடிய விளையாட்டு
மரபு சார் தமிழனுக்கு
பெருமை சேர்க்கும்
ஜல்லிக்கட்டு மைதானம் திறக்க
வருகைதரும்...
மாண்புமிகு தமிழ்நாடு
முதல்வரே!
வருக! வருக!!
அன்புடன் வரவேற்று மகிழும்...
P.மூர்த்தி
வணிகவரி (ம) பதிவுத்துறை அமைச்சர்
மதுரை வடக்கு மாவட்ட செயலாளர்
ஆ.வெங்கடேசன்
சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர்
மதுரை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர்
மதுரை வடக்கு மாவட்ட திமுக

# திராவிடப் போராளிகள் 51

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## கொள்கைச் சுடரொளி என்.வி.என். புவனேஸ்வரி!


ஓவியம் : ரவி பேலட்

காலந்தோறும் தொடர்கின்ற சுயமரியாதை சமத்துவத்துக்கான உரிமைக் குரலின் இருபதாம் நூற்றாண்டு வடிவம்தான் திராவிட இயக்கம். அதன் மற்றொரு தனிச்சிறப்பு, எண்ணற்ற பெண்களின் பங்கேற்பு.

அத்தகைய போராளிப் பெண்கள் வரிசையில் நாம் அறிந்துகொள்ள வேண்டியவர் புவனேஸ்வரி. 1918-ஆம் ஆண்டு சென்னைக்கு அருகில் செங்குன்றம் பகுதியிலுள்ள ஞாயிறு என்ற ஊரில் பிறந்தவர். தந்தை பெயர் குப்புசாமி பாகவதர். தாயார் அமிர்தம் அம்மாள். அவர் குடும்பத்தின் பக்தியைப் பெற்றோர் பெயரே விளக்கிவிடும். புவனேஸ்வரியும் பழமையிலும் பக்தியிலும் ஊறியவர்தான். அவரது பெற்றோர் பார்த்துவைத்த மணமகன் நடராசனோ, தீவிர பெரியார் தொண்டர். என்.வி.என். என்றால், இன்னும் எளிதாகப் புரியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவர் என்.வி.நடராசன். தொடக்கத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர். பின்னர் தந்தை பெரியாரின் தொண்டராகவும், அண்ணாவின் தோழராகவும் மாறியவர். அதனால் தன் திருமணத்தை, தந்தை பெரியார் தலைமையில் நடத்திக்கொள்ள வேண்டுமென்று தீவிரமாக இருந்தார். எனவே புவனேஸ்வரி-என்.வி.நடராசன் ஆகியோரின் திருமணம் தந்தை பெரியார் தலைமையில் 1936-ஆம் ஆண்டு நடைபெற்றது.

முதல் பெண் குழந்தை 1937-ஆம் ஆண்டு பிறந்தது. இரண்டாவது பிறந்த ஆண் குழந்தைக்கு ஆறு மாதமான போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ்நாட்டில் வெடித்தது. அன்றைய சென்னை மாகாண முதல்வர் ராஜாஜியின் இந்தித் திணிப்பையும் அடக்குமுறையையும் எதிர்த்து நின்ற பெரியார் பெரும்படையில் முன்னணி வீரராக இருந்தார் என்.வி.என்.

13.11.1938 அன்று காலை புவனேஸ்வரியின் பெற்றோர் மிக விரிவான ஒரு பூஜைக்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள். நூறு தேங்காய், நூறு பழம், நூறு மஞ்சள் என ஏராளமான பொருட்கள் பரப்பிவைக்கப்பட்டன. புவனேஸ்வரியும் குளித்துவிட்டு பூஜைக்குத் தயாரானார். திடீரென்று அங்கு வந்த அவர் கணவர் நடராசன், பூஜைக்கு முன்னால், 'சிவன் கோயிலுக்குப் போய் வந்துவிடலாம்' என்றழைத்தார். கோயிலுக்குப் போகாத கணவரின் அழைப்பு புதிராக இருந்தது புவனேஸ்வரிக்கு. அவர் அழைப்பது கோவிலுக்கு அல்ல, என்பது புரிந்தாலும் கணவர் சொன்னது போல் ஒரு பையில் தேங்காய், பழம் எடுத்து வைத்துக்கொண்டு ஆறுமாத குழந்தையான சோமுவை இடுப்பில் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார், புவனேஸ்வரி.

இருவரும் சென்ற இடம் சென்னை பெத்துநாயக்கன்பேட்டை . அங்கு சென்றவுடன் தேங்காய், பழப் பையை அங்குள்ள கோயில் வாசலில் வைத்துவிட்டு, 'வா நாம் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்' என்றழைத்தார் என்.வி.என். "அவர் கூறியதைக் கேட்டு நான் வியப்படையவில்லை. ஏனெனில், அவர் "கோயிலுக்கு வா" என்றழைத்தபோதே எனக்குத் தெரியும், நாம் போவது கோயிலுக்கு அல்ல என்று. எனக்கும் கட்டாய இந்தியை எதிர்க்க வேண்டும் என்ற வேகம் இருந்தது. பையை கோயில் வாசலில் வைத்துவிட்டு, இந்தி எதிர்ப்புப் போரில் கலந்துகொண்டு இந்தியை எதிர்த்து, ஆவேசமாக முழக்கமிட்டேன்" என்று என்.வி.என். அவர்களின் மணிவிழா மலரில் தன் இனிமையான நினைவாகப் பதிவு செய்தார் புவனேஸ்வரி.

டாக்டர் தர்மாம்பாள், மூவலூர் ராமாமிர்தம் ஆகியோருடன் போராட்டக் களத்தில் இறங்கி கைது செய்யப்பட்டவர்களில் புவனேஸ்வரியும் ஒருவர். அந்தப் போராளிகளைக் கைது செய்தது காவல்துறை. கைது செய்யப்பட்ட பெண்களின் உறவினர்கள் வாழ்த்து கூறி, விடைகொடுத்த போது ஆறுமாத குழந்தையுடன் போலீஸ் லாரியில் ஏறி விடைகொடுக்கத் தன் கணவரைத் தேடினார் புவனேஸ்வரி. அவரோ போராட்டத்துக்கு அடுத்த அணியைத் தயார் செய்யச் சென்றுவிட்டார்.

> **ஒரு பெண்ணாக, உள்ள உறுதியோடு சிறைக்குச் செல்வது எளிது. ஆனால், ஒரு தாயாகத் தன் குழந்தை அடைந்த துன்பத்தைப் பார்த்த பின்பும் புவனேஸ்வரியின் கொள்கை உறுதி குறையவில்லை.**

ஒரு பெண்ணாக, உள்ள உறுதியோடு சிறைக்குச் செல்வது எளிது. ஆனால், ஒரு தாயாகத் தன் குழந்தை அடைந்த துன்பத்தைப் பார்த்த பின்பும் புவனேஸ்வரியின் கொள்கை உறுதி குறையவில்லை. அவரது குழந்தை சோமுவுக்கு சிறைச்சூழல் ஒப்புக்கொள்ளாததால் ரத்தபேதி ஏற்பட்டது. மருந்துகளும் பலனளிக்கவில்லை. குழந்தையை வீட்டுக்கு எடுத்துச்செல்லுவோம் என்ற நம்பிக்கையே இல்லை. அந்த நிலையிலும் புவனேசுவரி அம்மையார் வேண்டுகோள் விடுத்தோ மன்னிப்பு கேட்டோ வெளியே வரவில்லை.

சிறையில் உடனிருந்த சகோதரப் போராளிகளின் அக்கறையாலும், அதிகாரிகள் காட்டிய அன்பினாலும், குழந்தை குணமடைந்து ஆறு வார கால சிறைத்தண்டனையை முடித்த பிறகே, சிறையை விட்டு விடுதலையானார் புவனேஸ்வரி.

போராட்டத்துக்கு அனுப்பிய கணவர் என்.வி.நடராசன், புவனேசுவரி சிறை செல்லும்போது விடைகொடுக்கவுமில்லை, விடுதலையான பின்பு அழைத்துச் செல்லவும் வரவில்லை.

கணவரின் கட்டாயத்தால் போராட வந்தவராய் இருந்திருந்தால், புவனேசுவரியின் எதிர்வினை வேறுமாதிரி இருந்திருக்கும். ஆனால், பொதுப்பணிக்குத்தான் அவர் முக்கியத்துவம் கொடுப்பார் என்பதை உணர்ந்திருந்த புவனேசுவரியின் மனப்பக்குவம் அதற்காக அவரை வருத்தப்பட விடவில்லை. மேலும் 'சிறை எனக்குத் துன்பமாக இல்லை' என்றார். சிறை சென்று வந்த மருமகளைப் பெருமையோடு வரவேற்றார் மாமியார். ஆனால், புவனேஸ்வரியின் தாயும் தந்தையும் சிறைக்குப் போன பெண் தீட்டுப்பட்டு விட்டவள் என்று கருதி, தங்கள் மகளை நீண்ட காலம் பார்க்க மறுத்தார்கள்.

"அவர்கள் சிறைவாசத்தை அவமானமாகக் கருதினார்கள். நான் சிறைத்தியாகம், வேள்விக்குரிய புனிதஸ்தலம் என்பதை அவர்களுக்குப் புரியவைத்தேன்" என்றார் புவனேசுவரி.

மேலும், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் அரசியல் பின்னணியை அவர் எவ்வளவு தெளிவாக அறிந்திருந்தார் என்பது அவரது சொற்களில் வெளிப்பட்டது. "போராட்டத்தில் ஈடுபட்ட தாய்குலத்தைக் கேலி செய்யும் வகையில், குழந்தைக்கு பால் வாங்கிக் கொடுத்து வளர்க்க வக்கில்லாதவர்களும் அறைப்பட்டினிகளும் ஜெயிலுக்குப் போகின்றன" என்று முதல்வர் ராஜாஜி அமிலச் சொற்களை வீசினார்.

அவரது ஆணவப் பேச்சை தந்தை பெரியார் கண்டித்து அறிக்கை விட்டதுடன், சிறைச்சாலையில் உள்ள குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பால், பிஸ்கட் போன்ற உணவுப் பண்டங்களை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தினார். அதனால் பால் டின்களும், பிஸ்கட் பாக்கெட்டுகளும் ஹார்லிக்சும் பழவகைகளும் மலையாகக் குவிந்தன என்ற செய்தியையும் புவனேஸ்வரி அம்மையார் பதிவு செய்துள்ளார்.

தன் சிறைவாசத்தின் இரண்டு பெருமைகளாக புவனேஸ்வரி அம்மையார் கருதியது, தன் கணவருக்கு முன்னால், தான் சிறைக்குச் சென்றதும், தன் மகன் சோமு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் சிறை சென்றதையும்தான். "என்னோடு சிறையில் இருந்த சோமுவிற்கு நான் புகட்டிய பால் உணவாக மட்டுமல்லாமல், இந்தி எதிர்ப்பு உணர்ச்சிப் பாலாகவும் இருந்தது" என்று பல்லாண்டுகள் கழித்து நினைவுகூர்ந்தார், புவனேஸ்வரி அம்மையார்.

குடும்பப் பொறுப்புகளோடு இயக்கக் கூட்டங்களிலும் தொடர்ந்து பங்கேற்றார் புவனேசுவரி அம்மையார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணி, 1956-ஆம் ஆண்டு 'மகளிர் மன்றம்' என உருவாக்கப்பட்டது. அதன் செயலாளர்கள் இரண்டு பேர். ஒருவர் புவனேசுவரி நடராசன். மற்றொருவர் வெற்றிச்செல்வி அன்பழகன்.

புவனேஸ்வரி அம்மையாரின் கொள்கைப் பற்று தன் கணவர் என்.வி.நடராசருடன் சேர்ந்து, அவர் உருவாக்கிய பாரம்பரியத்தில் எதிரொலித்தது. ஆம், ஆறுமாதக் குழந்தையாக 1938-இல் தாயுடன் சிறைசென்ற என்.வி.என்.சோமு, 1965-இல் இளைஞராக இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் சிறை சென்றார். அவரது உழைப்பைப் பாராட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்திய நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் செயல்படும் வாய்ப்பினை அளித்தார்.

1938 ஆம் ஆண்டின் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டமும், அதில் பங்குபெற்ற திராவிடப் போராளிகளின் வாழ்க்கைச் செய்திகளும் பல தலைமுறைகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய பாடங்களாக இருக்கின்றன என்பதையே புவனேஸ்வரி நடராசன் என்ற திராவிடப் போராளியின் வாழ்க்கை விளக்குகிறது.

(வருவார்கள்...)

## பா.ஜ.க.வுக்கும் சேர்த்தே பேசுகிறது, தி.மு.க.!

பல லட்சம் தொண்டர்களைக் கூட்டி, கருத்தியல் வகுப்புகளை நடத்துகிற துணிச்சலும் ஆற்றலும் கொண்ட பேரியக்கம் தி.மு.கழகம் என்பதை, சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு மெய்ப்பித்திருக்கிறது. மாநில உரிமைகளை அடகுவைத்த எடப்பாடி பழனிசாமியின் சொந்த மாவட்டமான சேலத்தில், 'மாநில உரிமை மீட்பு' மாநாட்டை மிகப் பிரமாண்டமாக நடத்தியது ஏகப் பொருத்தமானது என்பதை, பேச்சாளர்கள் பலரும் சுட்டிக்காட்டினர்.

தற்போது, பிரதமராக இருக்கிற நரேந்திர மோடி அவர்கள், குஜராத் மாநிலத்தின் முதல்வராக இருந்தபோது மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் வேண்டும், முறையான நிதி ஒதுக்கீடு வேண்டும் என்றெல்லாம் கேட்டவர் 2014-ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தவுடன் அனைத்து மாநிலங்களுக்கான நிதியைக் குறைக்கும் விதமாக நிதிக்குழுவுடன் மோடி ரகசிய ஆலோசனை நடத்தியதாக, இப்போது தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இதுபோன்ற மாநில உரிமைப் பறிப்புகளால் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களும் சேர்ந்துதான் பாதிக்கப்படுகின்றன. சேலம் மாநாட்டில் இதனைக் குறிப்பிட்டுப் பேசிய இளைஞர் அணி செயலாளர், "தி.மு.க. மாநில உரிமைகள் கேட்பது தமிழ்நாட்டுக்காக மட்டும் அல்ல, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்காக மட்டும் அல்ல, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும் சேர்த்தே கேட்கிறது" என்றார். உரிமை கேட்பது ஆட்சியாளர்களுக்காக அல்ல, மக்களுக்காக அதுதான் மாநில உரிமை என்பதை உரத்துச் சொல்லியது சேலம் மாநாடு!.

## :ப்ளாஷ்பேக்



### அண்ணா கையால் மோதிரம்!


உதய வர்மன்

1967-ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், திராவிட இயக்க தீரர் திருச்சி எஸ்.ஏ.ஜி ராபி அவர்களுக்கு நிதி அளிப்புக் கூட்டத்தை அறிவித்தார். அந்த முயற்சியில், அதிக நிதியை வசூலித்தவர் என்ற முறையில் அண்ணா அவர்களின் கையால் என் தாத்தா மு.ந.வீராசாமி அவர்களுக்கு மோதிரம் வழங்கப்பட்டது. பல பழைய படங்கள் அவரிடம் இருந்தாலும், பேரறிஞர் அண்ணாவுடன் இருக்கும் இந்தப் படம் அவருக்கும் எங்களுக்கும் மறக்க முடியாத ஒன்று..

**-உதய வர்மன், சிறுகாம்பூர், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்பு ங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

## முன்னோடி நீதிக்கட்சி!

**1924-இல் பனகல் அரசரின் அமைச்சரவையில் பணியாளர் தேர்வு வாரியம் உருவாக்கப்பட்டது. வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டோர் 100 பேர்களுக்கு 10 பேர் கூட இல்லை என்ற நிலையை மாற்ற, இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக அமைக்கப்பட்ட பணியாளர் தேர்வு வாரியம் இதுதான். பின்னர் 1929-ல் தேர்வாணையக் குழுவாக உருவெடுத்தது. இன்றைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு வாரியமாக மாறியிருக்கிறது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 367




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.